விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 25 செவ்வாய்க்கிழமை (09.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

### கொரோனாவால்
## பருத்தித்துறையில் ஒருவர் மரணம்

*(கரணவாய்)*

**கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பருத்தித்துறையில் வயோதிப மாது ஒருவர் மரணமடைந்துள்ளார்.**

**கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்ள கோவிட் - 19 சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று நேற்று முன்தினம் வீடு திரும்பிய வயோதிபப் பெண்ணே நேற்று உயிரிழந்துள்ளார்.**

வடமராட்சியில் ஆசிரியை ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் அவரது குடும்பத்தவர்களுக்கு ▶19

## யாழை அச்சுறுத்தும் கொரோனா ஒரே நாளில் 23 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்.பல்கலைக் கழக ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி சோதனைகளில் 23 தொற்றா ளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் 22 பேரும் யாழ். பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் ஒருவரும் ▶19

## கொரோனா 5 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந் துள்ளதாக சுகாதார ▶19

## அநீதிகளுக்கு நீதி வேண்டி யாழில் தீப்பந்தப் போராட்டம்



▶03

## வவுனியாவில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா சமனங்குளம் இத்திகுளம் பகுதியில் குடும் பஸ்தரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள் ளது. ▶19

## வடக்கில் நேற்றிரவு திடீர் மின்தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு ▶19

### காரைநகர் இ.போ.ச சாலையில்
# 8 சாரதிகள், நடத்துநர்கள் பேருக்கு கொரோனா

- நேற்று வரை சேவையில் ஈடுபட்டுள்ளனர்
- புதிய கொத்தணிக்கான அபாயம்

*(யாழ்ப்பாணம்)*

***காரைநகர் இலங்கை போக்குவரத்து சபைச் சாலையில் 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதில் 6 சாரதிகள், நடத்துநர்கள் நேற்று வரை சேவையில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் யாழில் புதிய கொரோனா கொத்தணி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.***

காரைநகர் இலங்கை போக்கு வரத்து சபை சாலையில் 8 பேருக்கு தொற்று உறுதியாகி யுள்ளது.

நேற்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நடத்தப் பட்ட பிசிஆர் பரிசோதனை முடி வில் இது உறுதியானது.

காரைநகர் சாலையில் ஏற் கெனவே ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டதையடுத்து, நேற்று ▶19

## வங்கி உதவி முகாமையாளர் நல்லூர் விபத்தில் பலி



### மின் தடைப்பட்டவேளை துயரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூரில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளை உதவி முகாமை யாளர் உயிரிழந்துள்ளார். ▶19

### யாழ்.பருத்தித்துறையில்
## இராணுவ தேவைக்காக காணி அபகரிக்க முயற்சி
### மக்கள் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் 3 குடும்பங்களுக்கு சொந்தமான சுமார் 4 ஏக்கர் காணியை இராணு வத்தினரின் தேவை ▶19

## அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள சில அத்தி யாவசிய பொருட் கள் போதுமான ▶19

### எதிர்வரும் திங்கட்கிழமை
## திட்டமிட்ட வகையில் பாடசாலைகள் ஆரம்பம்
### கல்வி அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

மேல் மாகாணத்தை தவிர்ந்த நாட்டின் அனைத்து மாகாணங் களிலும் உள்ள அனைத்து தர வகுப் புக்களைக்கொண்ட பாட சாலைகள் எதிர்வரும் ▶19

## என்னையும் வேவு பார்க்கின்றீர்களா? இலங்கைக்கான கனடா தூதுவர்

7ஆம் பக்கம் பார்க்க

### மகளிர் தினத்தை முன்னிட்டு
## கறுப்புத் துணி அணிந்து உறவுகள் போராட்டம்



▶07

# கொரோனாவால் உயிரிழந்த 31 பேருடைய ஜனாஸாக்கள் இதுவரை நல்லடக்கம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிஉயிரிழந்த மேலும் 7 பேருடைய ஜனாஸாக்கள் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று நான்காவது நாளாகவும் கொரோனா ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இதுவரையில் 31 பேருடைய ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

# நீதியை நிலைநாட்ட தவறியமையே ஜெனிவா பிரேரணைக்கான காரணம்

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நீதியை நிலைநாட்ட முன்நிற்பதாக சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து விலகியமையே இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் பிரேரணை கொண்டுவர காரணம் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அரசாங்கம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இலங்கைக்கு எதிராக இந்த பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருக்காது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு - எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தமது கட்சி நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்படும். மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணையை தோற்கடிக்க பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஜெனீவா தீர்மானம் நாட்டில் தற்போதய ஜனநாயக விரோத நடவடிக்கைகள், இராணுவமயமாக்கல் மற்றும் மனித உரிமை மீறல் உள்ளிட்ட சம்பவங்களை மேற்கோளிட்டுள்ளது என்பதை ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடனான மோதலை மட்டுமே அனைத்து அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டுவதாக ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# வவுனியாவில் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(வவுனியா)



வவுனியா புளியங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று காலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பூசகர் வீடொன்றில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சென்ற இனம் தெரியாத நபர்கள் அங்கு பெற்றோல் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த தாக்குதலில் எவருக்கும் காயங்கள் ஏற்படாத நிலையில் வீட்டின் கதவு சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் (ம-03.299)


## வேலையாட்கள் தேவை

யாழ். புறநகர்ப் பகுதியில் இயங்கும் உணவகமொன்றுக்கு சமையல் தெரிந்தவர், ரொட்டி தயாரிப்பவர் போன்ற வேலையாட்கள் தேவை.
(தங்குமிடம் வழங்கப்படும்)(6071)

077 384 8857


# புலம்பெயர் தேசிய சக்திகள் இராணுவத்தை பழிவாங்குகிறது

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு எதிராக முன்வைக்கும் போர் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் விதமாக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் திருப்தியளிப்பதாகவும், மனிதாபிமானமாக நாம் முன்னெடுத்த இந்த போராட்டம்குறித்து எவரும் எமக்கு கற்பித்து தர வேண்டிய அவசியம் இல்லை எனவும் இராணுவ தளபதி ஜென ரல் சவேந்திர சில்வா தெரிவி த்தார்.

இராணுவ த்தை பழிதீர்க்கவென புலம்பெயர் அமைப்புகளும் இங்குள்ள சிலரும் முயற்சிப்பதாகவும்அவர்கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்றுக்கொண்டுள்ளதுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவம் மீதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு இலங்கைக்கு எதிராக கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இது தொடர்பில் வினவிய போதே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் நகர்வுகளை கையாள்வதில் அரசாங்கம் செய்ய வேண்டிய மிகச்சரியான நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றனர்.

இராணுவத்தை பாதுகாக்கும் விதமாக அல்லது, இராணுவத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அரசாங்கம் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் என்றார். (ம-03)

# மரண அறிவித்தல்



## திரு. கார்த்திகேசு நடராசா

(ஓய்வுநிலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - நிதி)

**பிறப்பு : 03.07.1937**
**இறப்பு : 08.03.2021**

தென்புலோலியூர், புற்றளையைப் பிறப்பிடமாகவும் கந்தஉடையார் ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசா அவர்கள் நேற்று (08.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற மகாலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிரோன்மணியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, கணேசலிங்கம் (ஓய்வுநிலை திட்ட அதிகாரி தேசிய கல்வி நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தமிழ்ச்செல்வி (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். பல்கலைக்கழகம்), சிவசங்கரி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச சபை, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் க. ஐங்கரன் (ஆயுர்வேத வைத்தியர், சித்த மத்திய மருந்தகம் - பருத்தித்துறை), சி.சிவரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை - வலி. மேற்கு) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவித்ரா, லிதுஷன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் நாகபூசணி (கொழும்பு), இராமசாமி (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (09.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1633)

கந்தஉடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

021 226 3057

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## ஸ்ரீஸ்கந்தராஜா பகீரதன்

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி - சுன்னாகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் - 2001 கணித பிரிவு )

**பிறப்பு : 10.06.1982**
**இறப்பு : 08.03.2021**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல. 323/8, கோவில் வீதி, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்கந்தராஜா பகீரதன் நேற்று (08.03.2021) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஸ்ரீஸ்கந்தராஜா- சிவகுலராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிறிசோமசேகரம் - சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் வனஜாவின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் -மனிதவலு வேலை வாய்ப்பு தொழில் நிலையம், மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் பவஜன், லவஜன், சிவஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரணிதரனின் (அவுஸ்திரேலியா) அன்புச் சகோதரனும் தனுஜாவின் (சம்பத் வங்கி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1634)

இல. 323/8,
கோவில் வீதி, நல்லூர்.

தகவல்:-
குடும்பத்தினர்

# தமிழ் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நீதி வேண்டி தீப்பந்தப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசால் தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, நீதி வேண்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தீப்பந்த போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லூர் பின் வீதியில் நடைபெற்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக்கோரி பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள் இணைந்து வடக்கு-கிழக்கில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் நீதிக்காக போராடும் இனத்தின் கோரிக்கைகளை ஐ.நா.கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்கள், மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-4-18-33)

## ஜூனில் மாகாண சபைத் தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுமென்பதால் அந்த மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தொடர்ந்து மாகாண சபை தேர்தலை பிற்போடுவது உகந்ததல்ல எனவும் இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்தவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 340 சபைகளில் 200 இற்கும் மேற்பட்ட சபைகளின் ஆட்சியை ஆளும் பொது ஜன பெரமுன பிடித்தது.

அதேபோன்று இம்முறையும் வெற்றி பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் ஆளும் கட்சி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

## பெண் வேட்பாளர்களுக்கு 25% ஒதுக்கீடு-ஐ.தே.க.

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபை தேர்தலுக்கு **25%** வேட்புமனுக்கள் பெண் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை கட்சி தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மாகாண ரீதியில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க மகளிர் பிரிவின் தலைவர் முன்வைத்த குறித்த திட்டம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் உள்ளூர் அரசியலில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் உறுதியாக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.(நி-4)

## கொரோனாத் தடுப்பூசிகள் தாமதமின்றி வழங்கப்படும்

### சீரம் நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ள மேலும் ஒரு மில்லியன் கொரோனாத் தடுப்பூசிகள் எவ்வித தாமதங்களும் இன்றி வழங்கப்படும் என இந்தியாவின் சீரம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசியை இலங்கைக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படும் என இந்தியாவின் சீரம் நிறுவனம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு தகவல் தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட தடுப்பூசிகளை தாமதமின்றி வழங்க இந்தியாவின் சீரம் நிறுவனம் உறுதியளித்துள்ளதாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

கோவிஷீல்ட் என்ற பெயரில் இந்தியாவின் சீரம் நிறுவனம் தயாரித்து வரும் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் 5 இலட்சம் டோஸ்கள் கடந்த மாதம் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

மீதமுள்ள ஒரு மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் மார்ச் இறுதி அல்லது ஏப்ரல் மாதங்களுக்குள் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-4)

## வெளிநாட்டு துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

பன்னல மற்றும் ரத்கம ஆகிய பிரதேசங்களில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பன்னல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் 3 துப்பாக்கி ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

ரத்கம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பிலும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

துப்பாக்கிகள் தொடர்பான சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவை தொடர்பில் பொது மக்களுக்கு தகவல்கள் கிடைத்தால் பொலிஸாருக்கு அறிவிக்க முடியும்.

துப்பாக்கிகள் அல்லது அவற்றை சட்டவிரோதமாக தம் வசம் வைத்திருப்பவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்க முடியும்.

1997 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு இவை தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (நி-4)

## பொறுப்புக்கூற வேண்டியவர்களே கூச்சலிடுகின்றனர்-சமல்

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெறும் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பில் அழுத்தங்களின் காரணமாக பொலிஸாரினால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாவனெல்ல சம்பவம் இடம்பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றிருக்காது.

எவ்வாறாயினும் பொறுப்புக் கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிடுவதாக நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீது நாளை பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. எதிர்க்கட்சியால் இது தொடர்பில் 3 நாட்கள் விவாதம் கோரப்பட்டுள்ளது. அரசாங்கம் அதற்கு தயாராகவுள்ளது. எவ்வாறிருப்பினும் பொறுப்புக் கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாவனெல்ல சம்பவம் இடம்பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றிருக்காது என அவர் தெரிவித்தார். (நி-4)

## 2024 இல் ஐ.தே.க.ஆட்சியே மலரும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை 2024 ஆம் ஆண்டு ஆட்சிக்குக் கொண்டு வருவேன் என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நகர்வுகள், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-4)

# இலங்கைக்கு ஏமாற்றம்

## தொடரை கைப்பற்றியது மே.தீவுகள்




இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது இருபது:20 கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்று மேற்கிந்தியத்தீவுகள் அணியானது 2:1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

கரீபியனுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணியானது மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் சர்வதேச முத்தரப்பு கிரிக்கெட் தொடர்களில் விளையாடி வருகிறது.

முதலாவதாக ஆரம்பமாகியுள்ள இருபது-20 கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியானது 4 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றது.

அதன் பின்னர் நடைபெற்ற இரண்டாவது இருபது-20 போட்டியில் இலங்கை அணியானது 43 ஓட்டங்களினால் வெற்றுத் தொடரை 1:1 என்ற கணக்கில் சமப்படுத்தியது.

இந்நிலையில் நேற்று இவ்விரு அணிகளுக்கிடையிலான தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி ஆரம்பமானது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியானது 20 ஓவர்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்ப வீரர்களான குணதிலக்க (9), பதும் நிசங்கா (5) ஆகியோர் குறைந்த ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேற, திக்வெல்ல 4 ஓட்டத்தையும் அணித் தலைவர் மத்தியூஸ் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அணி சார்பில் அதிகப்படியான ஓட்டங்களை குவித்த தினேஷ் சந்திமால் 46 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களுடனும் ஆஷென் பண்டார 35 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

132 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியானது 19 ஓவர்களிலேயே 7 விக்கெட்டுகளை இழந்து, இலங்கை அணி நிர்ணயித்த வெற்றி இலக்கை தொட்டது.


மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் லெண்ட்ல் சிம்மன்ஸ் 26 ஓட்டங்களையும் எவின் லூயிஸ் 21 ஓட்டங்களுடனும் கிறிஸ்கெய்ல் 13 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் கிரேன் பொல்லார்ட் டக்கவுட்டுடனும் நிகோலஷ் பூரண் 23 ஓட்டங்களுடனும் ரோவ்மன் பவல் 7 ஓட்டங்களையும் மற்றும் டுவைன் பிராவோ டக்கவுட்டுடனும் ஆட்டமிக்க, ஹோல்டர் 14 ஓட்டங்களுடனும் ஃபேபியன் ஆலன் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் சந்தகான் 3 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சாமர மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஃபேபியன் ஆலன் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணியானது தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (4)

# மார்டின் அதிரடி ஆட்டம்

## ஆஸியை வீழ்த்தியது நியூசிலாந்து




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடியது. இதில் இரு அணிகளும் தலா 2 ஆட்டங்களில் வென்று தொடர் சமநிலையில் இருந்தது.

இந்நிலையில், அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான 5 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நேற்று முன்தினம் நடந்தது.

டாஸ் வென்று முதலில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா 8 விக்கெட்டுக்கு 142 ரன்கள் சேர்த்தது. வேட் 29 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்சருடன் 44 ரன்கள் குவித்தார். கப்டன் ஆரோன் பிஞ்ச் 36 ரன்கள் எடுத்தார்.

அடுத்து களம் இறங்கிய நியூசிலாந்து 15.3 ஓவர்களில் 143 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. மார்டின் கப்தில் அதிரடியாக ஆடி 46 பந்துகளில் 4 சிக்சர், 7 பவுண்டரியுடன் 71 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கான்வே 36 ரன்னும், பிலிப்ஸ் 34 ரன்னும் எடுத்துள்ளனர்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியவுக்கு எதிரான இருபது-20 தொடரை 3-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து. ஆட்ட நாயகன் விருது மார்டின் கப்திலுக்கும் தொடர் நாயகன் விருது இஷ்சோதிக்கும் அளிக்கப்பட்டது. (4)

# சுவிஸ் ஓபன் பட்மின்டன்

## இறுதி போட்டியில் சிந்து தோல்வி



சுவிஸ் ஓபன் பட்மின்டன் தொடரில், மகளிருக்கான ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து, ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரினை எதிர்கொண்டார்.

நடப்பு உலக சம்பியனான பி.வி.சிந்து, ஆரம்பம் முதலே கரோலினாவின் தாக்குதல் ஆட்டத்தை சமாளிக்க முடியாமல் தடுமாறினார். முதல் செட்டை 12-21 என பறிகொடுத்த சிந்து, இரண்டாவது செட் ஆட்டத்தில் மேலும் பின்தங்கினார். 5-21 என அந்த செட்டையும் இழக்க, 35 நிமிடங்களில் சிந்துவை வீழ்த்தி கரோலினா சம்பியன் வென்றார். (4)

# வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடர்; இங்கிலாந்து வெற்றி



வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணிக்கெதிரான போட்டியில், இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

ரய்பூர் மைதானத்தில் நேற்று முன்தின்ம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 113 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மசூட் 31 ஓட்டங்களையும் ரஹ்மான் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணியின் பந்து வீச்சில், ட்ரெம்லட் 2 விக்கெட்டுகளையும் பனேசர், சைட் போடம் மற்றும் ஸ்கோஃபீல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 114 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி, 14 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 17 பந்துகளில் 7 பவுண்ரிகள் 1 சிக்ஸர் அடங்க்லாக 42 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட கெவீன் பீட்டர்சன் தெரிவு செய்யப்பட்டார். (4)

# புலனாய்வு தகவல் கிடைத்தும் பென்டகன் தாக்குதலை அமெரிக்காவால் தடுக்க முடியவில்லை-மைத்திரி



(கொழும்பு)

அமெரிக்க புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்த போதும் அவர்களினால் பென்டகன் தாக்குதலை தடுக்க முடியாமல் போனதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்துருகிரிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், முழு உலகமும் அடிப்படைவாதம், தீவிரவாதம், இஸ்லாம் தீவிரவாதம் என்பவற்றுக்கு முகம்கொடுத்துள்ளது.

பாரிய வளமும் தொழில்நுட்பத்தில் பலம் பொருந்திய நாடுமான அமெரிக்காவிற்கு கூட செப்டெம்பர் 11 தாக்குதல்களை தவிர்க்க முடியாமல் போனது என மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பென்டகனிலுள்ள பாதுகாப்பு தலைமையகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த பின்லேடனின் தாக்குதல்களை தவிர்க்க முடியாமல் போனது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பின்லேடனின் தாக்குதல்கள் தொடர்பாகவும் அமெரிக்கப் புலனாய்வு பிரிவுக்கு இரு வாரங்களுக்கு முன்னரே தகவல்கள் கிடைத்திருந்த போதும் அமெரிக்காவினால் அதனை தவிர்க்க முடியவில்லை என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (நி-4)

# முக்கிய பரீட்சைகள் பிற்போடப்படும் சாத்தியம்

## அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

**திட்டமிடப்பட்டபடி பாடத்திட்டத்தை நிறைவு செய்ய முடியாதுள்ள நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையை தாமதப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.**

இது தொடர்பான விசேட கலந்துரையாடல், பரீட்சைகள் திணைக்களம், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாகாண கல்விபணிப்பாளர்கள் இடையே நடைபெற்றதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இதுவரை உள்ளடக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் பிரச்சினை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பாடசாலை மட்டத்தில் மேலதிக தகவல்களை சேகரித்த பின்னர் இறுதி முடிவு எட்டப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

க.பொ.த.உயரதரப் பரீட்சை மற்றும் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை என் பன ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்றுவரும் நிலையில் மாற்றம் குறித்த அறிவிப்பை கல்வி அமைச்சு விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-4)



சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு வவுனியாவில் நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் அவர்கள் சுழற்சி முறையில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் பந்தலுக்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது.

(படம்:-சதீஸ்)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 08.02.2021 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்.பொன்னையா-பாலசிங்கம்

(முன்னாள் கிராம சபைத் தலைவர்-புதுக்குடியிருப்பு)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 10.03.2021 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் "அன்னாரின் இல்லத்தில்" நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

4 ஆம் வட்டாரம்,
இரணைப்பாலை வீதி,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்.
077 375 2140, 077 375 2112

(C-1629)

# இந்தியாவிடமிருந்து தடுப்பூசிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் மாற்றுவழி-ஹேமந்த



(கொழும்பு)

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து தடுப்பூசிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுமாயின் இரண்டாவது முறையாக தடுப்பூசியை செலுத்துவதற்காக மாற்று வழிகளில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியுமென பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

குறித்த நிறுவனத்தில் அண்மையில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக இலங்கை பதிவு செய்திருந்த வகையில் தடுப்பூசிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுமென தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட ஹேமந்த, "தற்போது இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள தடுப்பூசிகளில் 7 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள தடுப்பூசிகள் தற்போது சுகாதார தரப்பின் வசம் உள்ளது. இந்த நிலையில் இரண்டாவது முறையாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் தடுப்பூசி செலுத்த வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் குறித்த நிறுவனத்திடம் இருந்து தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுமாயின் அதே தயாரிப்பை வேறு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும் இரண்டாவது தடுப்பூசி செலுத்துவதில் பிரச்சினை ஏற்படாது. இரண்டாவது முறையாக தடுப்பூசி வழங்கும் காலம் வரும்போது தடையின்றி தடுப்பூசிகள் கிடைக்குமென நம்புகிறோம்" என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (நி-4)

**Invitation for Bids (IFB - 2021/02)**

**Department of Irrigation, Northern Provincial Council**

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் PSDG, Recurrent நிதி மூலங்களின் 13 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக்கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 06.03.2021 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 14 இல் பார்வையிடலாம்.

(C-1631)

நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

## சுகாதார தொண்டர்களின்

# கவனயீர்ப்புப் போராட்டம்

## உணவு தவிர்ப்பு போராட்டமாக முன்னெடுப்பு



(நல்லூர்)

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை நேற்றுக் காலையில் இருந்து உணவு தவிர்ப்புப் போராட்டமாக முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தை முன்னெடுத்து வரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் 8 ஆவது நாளான நேற்று தமது போராட்டத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக முன்னெடுத்துள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனத்தை மீளப் பெற்று தருமாறு கோரிக்கை விடுத்தே இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (5-4-18-33)




# யாழ்.செம்மணி இந்து மயானத்தில் வெடிபொருள்?



(நல்லூர்)

நல்லூர் - செம்மணி வீதியின் வடக்கே உள்ள இந்து மயானம் நேற்று அதிகாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மயானம் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

நேற்று அதிகாலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்து மயானத்தில் பை ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில் ஆபத்தான வெடிமருந்து காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து முன்னெடுத்துள்ளனர். (5-4-33)

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(வரணி)

வரணிப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வீட்டுத் தேவைகளுக்காகவும் ஆலயங்களின் கட்டுமானப் பணிகளுக்காகவும் வைக்கப்பட்டுள்ள மணல் இரவு வேளையில் திருடப்படுவதாகவும் அத்துடன் மின் விளக்குகளையும் கழற்றிச் செல்வதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுபோன்ற சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் மகளிர் தின நிகழ்வு



(நல்லூர்)

"நாடும் தேசமும் உலகமும் அவளே" எனும் தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இதன்போது யாழ்.மாவட்ட பெண் தொழில் முயற்சியாளர்களது உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-33-101)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி அங்கணாக்கடவை குளங்கரை பிள்ளையார்ஆலய விசேட பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நாகம்மாள் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என தலைவர் செ.குருபரர் அறிவித்துள்ளார். (5)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஓம் ஸ்ரீ அருள் மிகு சிவசக்தி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கோ.கோபாலகிருஷ்ணசர்மா, சா.கோபாலசர்மா, சுந்தரேஸ்வரசர்மா குருக்கள் அருளாசி உரை மற்றும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.(5-4)

# ஏழாலையில் இரத்ததான முகாம்



(குப்பிழான்)

ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நடமாடும் இரத்த வங்கிப் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏழாலை தெற்கிலுள்ள தனியார் மண்டபத்தில் இடம் பெற்றது. (5-4-18)

# போதைப் பொருட்களுடன் ஐவர் பொலிஸாரால் கைது

(நல்லூர்)

ஒரு கிலோ கஞ்சா மற்றும் 6 கிராம் ஹெரோயினுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் கப்புலியத்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. யாழ்.குருநகர் பகுதி தண்ணீர் தாங்கி வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



அவரிடம் இருந்து 3 கிராம் தூய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. இதே வேளை யாழ்.மணியந்தோட்டம் பகுதியில் நுகர்வு மற்றும் விற்பனைக்காக ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

மேலும் யாழ்.குருநகர் பகுதியில் கடற்கரை வீதியில் விற்பனைக்காக வீடு ஒன்றில் பதுக்கி வைத்திருந்த கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் இருந்து ஒரு கிலோ 370 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. பொலிஸாரை கண்டதும் கஞ்சாவை தீயிட்டு கொளுத்த முற்பட்டவேளை குறித்த நபரை பொலிஸார் கைது செய்ததுடன் கஞ்சாவையும் மீட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 5 நபர்களிடமும் பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-33)





முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 இல் ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று நான்காவது ஆண்டுகளை கடந்துள்ளது. சர்வதேச மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்க முல்லையில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்:-தவசீலன்)

# பொதுபல சேனாவை தடைசெய்ய முடியாது

## அரசாங்கம் உறுதி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு பொதுபல சேனா அமைப்பை தடைசெய்யுமாறு பரிந்துரைத்த போதிலும் அந்த பரிந்துரையை நிராகரிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடந்த ஊடக சந்திப்பில் உரையாற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் உள்ள சில பரிந்துரைகளை அமுல்படுத்துவது சிரமமாகும். விசேடமாக பொதுபல சேனா அமைப்பு குறித்த பரிந்துரையை அமுல்படுத்துவதானது கடினமாகும். அரசாங்கத்தின் விருப்பமும் அதுகுறித்து இல்லை. அந்த அமைப்பை தடை செய்வதால் நன்மை ஏற்படும் என்றல்ல. ஆகவே அரசாங்கம் அவ்வமைப்பை தடை செய்யாது.

ஆனால் கல்வி குறித்த பரிந்துரைகளை அமுல்படுத்த முடியும். இனவாத சிந்தனைகள் பாட விதானங்களில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை நீக்க வேண்டும். மத்ரஸா நிலையங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டும் உள்ளிட்ட பரிந்துரைகளை கல்வி அமைச்சு அனுமதிக்கின்றது" என அவர் தெரிவித்தார். (நி-4)

# உள்ளூராட்சிசபைத் தேர்தல் அடுத்தாண்டு மார்ச் மாதம்?

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

23 மாநகர சபைகள் உட்பட 335 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது.

குறித்த சபைகளின் பதவிக் காலம் அடுத்த வருடம் ஜனவரியில் முடிவுக்கு வருகின்றது. இந்தநிலையிலேயே தேர்தலை மார்ச் மாதத்துக்குள் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு கலப்பு முறைமையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றது. இதன்மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன், பெண் பிரதிநிதித்துவமும் கட்டாயமாக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையில் சில குளறுபடிகள் உள்ளன. இதனால் ஸ்திரமற்ற ஆட்சியும் அமைகின்றது. எனவே, சில திருத்தங்களுக்கு மத்தியிலேயே தேர்தல் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது. (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 73 செவ் 11 சூரி 1 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA,MSC,PHD, விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: இந்து வேளாளர் குலத்தில் ஆசிரியர் அல்லது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர். உள் நாடு மட்டும்
தொ.இ: B/11561

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: மூலம்
கி.பா: 51 ¾ செவ் 1 சூரி 3 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Bachelors in Hospitality. Work –Marketing officer(Softlogic)
எதிர்பார்ப்பு: அரச தொழில்,வங்கி, தகுந்த தனியார் தொழில் விரும்பத்தக்கது. வெளி நாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/11563

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: 8 செவ் 12 சூரி 10 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: Software Engineer, Bank Exams Completed. Work-Software Engineer.
எதிர்பார்ப்பு: தகுந்த கல்வி கற்ற மணமகள். வெளி நாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/11565

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 4 சூரி 7 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L,A/L, விவசாயம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள் நாடு மட்டும்
தொ.இ: B/11566

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 22 செவ் 2 சூரி 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L, நிரந்தர பாலர் பாடசாலை ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: படித்த மணமகன் உள்நாடு. வெளிநாடு ஏதுவாயினும்
தொ.இ: G/11668

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 11 சூரி 8 ல்
தகைமை/தொழில்: O/L,Work- தையல்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த உத்தியோகம் உள்ள மணமகன். உள்நாடு மட்டும்
தொ.இ: G/11672

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 39 செவ் 12 சூரி 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பொறியிலாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். USA,Canada
தொ.இ: G/11678

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 64 செவ் 7 சூரி 9 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: கனடா தகைமை, (அரச தொழில்) PR உண்டு.
எதிர்பார்ப்பு: கனடா மட்டும் , எஞ்சினியர், எக்கவுண்டன் தொழில் புரிபவர்.
தொ.இ: G/11679

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நாளை புதன்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை குறித்த விவாதத்தை 10ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (நி-4)

# தாம் கண்காணிக்கப்படுவதாக சந்தேகம் எழுந்துள்ளது இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

தாம் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதாக சந்தேகம் எழுவதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

தமது வீட்டுக்கு முன்பாக ஊடகங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் தமது தனிப்பட்ட சந்திப்புகள் தொடர்பில் எவ்வாறு ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின்றன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கனேடிய இல்லத்தில் கனேடிய உயர்ஸ்தானிகரை பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் சந்தித்தமை தொடர்பாக இரண்டு பத்திரிகைகள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

இதனைத் தவிர இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் மற்றும் தென் கொரிய தூதுவர் ஆகியோருடனான சந்திப்புக்கள் தொடர்பிலான தகவல்களும் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

பங்களாதேஷ் மற்றும் தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் கண்காணிக்கப்படுவதாக வெளியாகும் தகவல்களை நிராகரிப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)


**பகிரங்க அறிவித்தல்**
**நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படும் திரவக்கழிவகற்றல் (Gully Emptier) சேவை தொடர்பானது**

சபை எல்லைக்குள் திரவக்கழிவகற்றல் சேவை (சுத்திகரிப்பு சேவை) நிலையத்தை வைத்திருப்பவர்களும், திரவக்கழிவகற்றல் சேவையை (சுத்திகரிப்பு சேவை) வழங்குபவர்களும் தங்களுடைய சேவை தொடர்பான பதிவுகளை சபையின் நல்லூர் உப அலுவலகம் மற்றும் கொக்குவில் உப அலுவலகத்தில் எதிர்வரும் 2021.03.23ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த திகதிக்கு பின்னர் சபையின் அனுமதியின்றி திரவக் கழிவகற்றல் சேவை (சுத்திகரிப்பு சேவை) வழங்குவோர் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

திரு.ப.மயூரன்
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை. (C-1632) 2021.03.09

# நுண்கடன் நிதிகள் தொடர்பில்

## பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு விழிப்புணர்வு

(கண்டாவளை)

**நுண்கடன் நிதிகள் தொடர்பில் பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பல்வேறு மட்டங்களிலும் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் பெண்கள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் நுண் கடன்களால் பாதிக்கப்பட்டு தற்கொலை வரை சென்றுள்ளனர். இது தொடர்பில் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவிக்கையில், நுண் கடன்கள் தொடர்பில் அவதானித்து இருக்கின்றோம். இது தொடர்பான விழிப்புணர்வுகள் பெண்களுக்கு கிராம மட்டங்களிலும் வழங்கி வருகின்றோம். அதேநேரம் அரச சார் பற்ற நிறுவனாங்கள் ஊடாகவும் விழிப்புணர்வுகள் வழங்கப்படுகிறது.

அத்துடன் அரச உத்தியோகத்தர்கள் ஊடாகவும் கிராம மட்டங்களிலும் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் கிராமங்களில் கடன்களை பெறுகின்ற குடும்பங்கள் தொடர்பாக கடந்த காலங்களிலே பாரிய தொரு பிரச்சினையாக காணப் பட்டது. இதனால் தற்கொலை முயற்சிகளும் இடம் பெற்றிருக் கின்றன என்பதை நாங்கள் அறிந்து இருக்கின்றோம். ஆயினும் அதனுடைய தாக்கம் ஓரளவுக்கு தற்போது குறைந்ததாகவே நான் கருதுகின்றேன். குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பல் வேறு தேவைகள் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன என்பது நாங்கள் மறுக்க முடியாத ஒரு விடயம். அந்த வகையிலேயே மக்கள் கடன் பெறுவதற்கு கடன்களை வழங்குகின்ற நிதி நிறுவனங்களை நாடுகின்ற செயற்பாடுகளை அதிகம் அவதானித்து இருக்கின்றோம்.

இது தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு வழங்கி வருகின்றோம். எனினும் கிராம மட்டங்களில் செயற்படுகின்ற கூட்டுறவு சங்கங்களின் ஊடாக கடன்களை பெறக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நுண்நிதி கடன்களால் வருகின்ற பாதிப்புக்களை, செயற்பாடுகளை குறைப்பதற்கான செயற்பாடுகளை உருவாக்கி இருக்கிறோம். மத்திய வங்கி ஆளுநரிடம் இந்த விடயங்களை முன்னிறுத்தி இருக்கின்றோம். கிராம மட்டங்களில் மக்கள் இதுவிதமான கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு கிராம மட்டங்களில் வங்கிச் சேவைகளை விஸ்தரிக்கும் படியாகவும் கோரியுள்ளோம். அதுமட்டுமல்லாது அண் மையில் உருவாக்கப்பட்ட ஒரு கிராமத்துக்கு ஒரு வங்கி என்ற திட்டமும் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையிலேயே வங்கிகள் சில கிராமங்களை தத்தெடுக்கும் போது அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய தேவைகள் மற்றும் வியாபார முயற்சிகள், பொருளாதார முய ற்சிகள் முன்னெடுப்பதற்கான கடன் உதவிகளை பெறக்கூடியதாக அமையும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நுண்நிதி கடன்களை பெறும் செயற்பாடுகளில் இருந்து மக்களை விடுவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (5-4-315)

# மகளிர் தினத்தை முன்னிட்டு விசேட கவனயீர்ப்பு பேரணி





(மன்னார்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமூக ரீதியில் பெண்கள் கொண்டிருக்கும் பொறுப்பு வாய்ந்த பங்களிப்பை வெளிப்படுத்தும் முகமாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழு தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் விசேட கவனயீர்ப்பு பேரணி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது.

விழிப்புணர்வுக்கு என பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட ஊர்தியில் சமூகத்தில் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புக்களை ஒப்பனை செய்தவாறும் பெண்கள் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் பேரணியாக மன்னார் நகரப்பகுதியை வந்தடைந்த குழுவினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

குறிப்பாக பெண்கள் சார்ந்த சட்டங்கள் மற்றும் பெண்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களிடம் விநியோகித்ததுடன் பொது இடங்கள் மற்றும் பேருந்துகளிலும் காட்சிப்படுத்தினர். குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தினர், இளைஞர், யுவதிகள் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-4-285)



**முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட நட்டாங்கண்டல் பகுதியில் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானினால் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இதில் அரசாங்க அதிபர் க.விமலநாதன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் என்.ரஞ்சனா ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**(படம்–தவசீலன்)**




**முல்லைத்தீவு கள்ளப்பாடு ஆதிவைரவர் அறநெறிப் பாடசாலையின் மாணவர்களுக்கான பரிசளிப்பும் பொங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னைநாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டார். (படம்-கிருஷ்ணகுமார்)**

# கிராமிய குளங்கள் புனரமைப்பு கோம்பாவிலில் ஆரம்பம்

(பனிக்கன்குளம்)



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் "நீர்ப்பாசன செழிப்பு" எனும் 5000 கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 58 குளங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் குளத்தின் புனரமைப்பிற்கான அங்குரார்ப்பண நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தான் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டஅரசாங்க அதிபர் க.விமலநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், கமநல திணைக்கள உதவி ஆணையாளர், விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ,நீர்ப்பாசன பொறியிலாளர்கள், கமக்காரஅமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.(5-4-281)

## இராசிபலன்

09.03.2021
மாசி 25, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 4.57 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 10.20 மணிவரை
சுபநேரம் 10.54 - 12.24 மணிவரை
இராகுகாலம் 3.24 - 4.54 மணிவரை
சந்திராஷ்டமம்:- மிருகசீரிடம், திருவாதிரை
ஏகாதசி விரதம். வளவன்

**மேஷம்** – செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயர்சை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** – மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மிதுனம்** – மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வரவை மிஞ்சிய விரயங்கள் மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்** – அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**சிம்மம்** – இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், உடல் நலம் சீராகும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** – உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** – வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வீட்டைச் சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** – பாராட்டும் புகழும் கூடும் நாள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், வாக்கு மேன்மையுண்டு, தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** – தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறு சிறு மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்** – அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

கடவுளை வஞ்சிக்க நினைப்பவன் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்வான்.

# விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார் நாமல்

## விமான சேவை 45 நிமிடங்கள் தாமதம்



(கொழும்பு)

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் விமானமொன்றின் சேவை, 45 நிமிடங்கள் தாமதப்படுத்தப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொள்வதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு துறை அதிகாரிகளுக்கு, நீதிமன்றம் விதித்த பயணத் தடையை நீக்குவது குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இதனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைச்சர் நாமல் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளை சுமார் 45 நிமிடங்கள் தாமதப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்ததாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு- கோட்டை நீதவான் நீதிமன்றம், நாமல் ராஜபக்ஷ மீது இரண்டு பயணத் தடைகளை பிறப்பித்திருந்தது. இவை இரண்டும் கடந்த 4 ஆம் திகதி நீக்கப்பட்டது.

இதனை நீதிமன்ற பதிவாளர் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறைக்கு தபால் மூலம் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வெளிநாட்டுக்கு விஜயமொன்றினை மேற்கொள்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றிருந்தார்.

குறித்த தருணத்தில், கட்டுநாயக்க விமான நிலையம், நீதிமன்றம் இரத்து செய்திருந்த உத்தரவைப் பெறவில்லை. இதனால் அதிகாரிகள், நாமல் ராஜபக்ஷவை வெளிநாடு செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளர், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவுத்துறை அதிகாரிகளுக்கு தொடர்புகொண்டு, நாமலுக்கு பயணத் தடை நீக்கப்பட்டுள்ளமை குறித்து அறிவித்தார்.

அதன் பின்னர், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினருடன் எமிரேட்ஸ் விமானம் காலை 10.45 மணியளவில் டுபாய்க்கு காட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# சீனி இறக்குமதியில் பாரிய முறைகேடு

## நடவடிக்கை எடுக்க அரசு தவறி விட்டது

(கொழும்பு)

மத்தியவங்கி பரிவர்த்தனைகள் நிறுத்தப்பட்டுள்ள போதும் தற்போதைய அரசாங்கம் விசாரணையைத் தொடங்கத் தவறிவிட்டது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நடவடிக்கை தற்போது சீனி இறக்குமதியில் 10 பில்லியன் ரூபாய் மோசடிக்கு வழிவகுத்தது என அக்கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மத்தியவங்கி முறிகல் மோசடி குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போது குறித்த பரிவர்த்தனையை ரணில் விக்கிரமசிங்க நிறுத்தி வைத்தார்.

இந்நிலையில் பத்திரங்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிதிகளும் இன்று வரை மத்திய வங்கியில் இருப்பதாக ருவான் விஜேவர்தன குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் சீனி இறக்குமதியில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக இதேபோன்ற நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது என அவர் குற்றம் சாட்டியுள்ளார். (நி-4)

# டிக்கோயாவில் மினி சூறாவளி 23 வீடுகள் சேதம்



(ஹற்றன்)

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கலை மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக அந்தத் தோட்டத்திலுள்ள 23 தொடர் மற்றும் தனி குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன. மின் கம்பிகள் மீது மரங்கள் வீழ்ந்துள்ளதால், மின்சாரமும் துண்டிப்படைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு நேற்றுக் காலை சென்ற நோர்வூட் பிரதேச சபையின் தலைவர், பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்க இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்து மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலிப்புலவரும் நெல்மணிகளும்



அது ஒரு அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு திறமை வாய்ந்த புலவர் ஒருவர் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

சில மாதங்களுக்கு பிறகு. அவரது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது. மேலும் இதிலிருந்து மீள்வதற்கு என்ன செய்வதென்று புலவர் யோசித்துக்கொண்டு இருந்தார்.

புலவரின் நிலையைப் பார்த்த அந்த கிராமத்தின் தலைவர் புலவரிடம் சென்று, "நம் நாட்டின் அரசரை புகழ்ந்து பாடும் புலவருக்கு கேட்கும் பரிசினை கொடுக்கிறார். அந்த பரிசினைப் பெறுவதற்கு நீயும் முயற்சிக்கலாமே" என்று கூறினார்.

இது சரியான தருணம் என்று கருதிய புலவரும் மன்னரைப் பார்க்க அரண்மனை நோக்கிப் பயணித்தார்.

மன்னரைப் புகழ்ந்து பாடுவதற்காக சென்ற புலவர் அரண்மனையை அடைந்தார். மன்னரைப் பற்றியும், அவரது ஆட்சி பற்றியும் புகழ்ந்து பாடினார்.

புகழ்ந்து பாடிய புலவரின் பேச்சில் மகிழ்ச்சி அடைந்த அரசன் புலவனிடம், "உனக்கு என்ன பரிசு வேண்டுமோ கேள்" எனக் கூறினார்.

புலவரும் இதுபோன்ற வறுமை எப்பொழுதும் என் குடும்பத்தை பாதிக்கக் கூடாதென்று யோசித்தார். பின்னர் அரண்மனையில் ஒரு சதுரங்கப் பலகை இருப்பதைப் பார்த்தார்.

"அரசே எனக்கு பெரிதாக எதுவும் வேண்டாம் அங்கே சதுரங்க பலகை ஒன்று இருக்கிறதல்லவா அதில் முதலாம் கட்டத்தில் ஒரு நெல்மணியை வைத்த் பின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அதனை இரட்டிப்பாகினால் அதை தக்க பரிசாக ஏற்றுக் கொள்வேன்" என்று கூறினார்.

மன்னர் புலவரைப் பார்த்து, "நெல்மணிகள் போதுமா? தங்கம், வைரம் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் வேண்டாமா?" என்று கேட்டார். புலவரோ "அரசே எனக்கு நெல்மணிகள் மட்டும் போதும்" என்று கூறிவிட்டார். பொன்னோ பொருளோ கேட்பார் என எண்ணியிருந்த அரசனும் புலவனை எள்ளி நகையாடி சரி என கூறிவிட்டார். (தொடரும்)

# மகாபாரதம்




### பாண்டவர்- கௌரவர் பிறப்பு

அரியணை ஏறிய பாண்டு அஸ்தினாபுரத்திற்கு அடங்கா மன்னர்களை அடக்கி அவர்களை கப்பம் கட்ட வைத்தான்.

நாட்டில் நல்லாட்சி செய்தான். பாண்டுவின் செயல்களை மக்கள் பாராட்ட பீஷ்மரும் மகிழ்ந்தார்.

ஒருநாள் வேட்டையாட பாண்டு தன் மனைவியர் பரிவாரங்களுடன் காட்டிற்கு சென்றான். அங்கு புணர்ச்சியில் ஈடுபட்டிருந்த இரு மான்கள் மீது சற்றும் யோசனையின்றி அம்பு செலுத்தினான்.

ஆண்மானாக இருந்த கிந்தமர் என்னும் முனிவர் பாண்டுவிற்கு இல்லற "இன்பத்தை விரும்பிப் பாண்டு மனைவியுடன் கூடும் போது இறப்பான்" எனச் சாபமிட்டார். இதனால் மகப்பேறு இல்லாமல் போகுமே எனப் பாண்டு கவலையுற்றான்.

மன்னனின் கலக்கம் கண்ட குந்தி தனது இளமைப்பருவத்தில் துருவாசர் அருளிய மந்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்டாள். அதைக் கேட்டு பாண்டு மகிழ்ந்தான்.

(தொடரும்)

சூரசேனன் தன் மகளை குந்திராஜனுக்கு, வளர்ப்பு மகளாகக் கொடுத்தான். இதனால் பிரிதாவிற்கு குந்தி என்ற பெயர் உண்டானது.

ஒரு சமயம் மகரிஷி துருவாசருக்கு குந்தி பணிவிடை செய்ய அதனால் மனம் மகிழ்ந்த ரிஷி அவளுக்கு ஒரு மந்திரத்தை அருளினார். அதை உச்சரித்தால் வேண்டிய தெய்வம் தோன்றி அருள்பாலிக்கும் என்றார்.


மந்திரத்தை சோதிக்க எண்ணிய குந்தி ஒருநாள் சூரியனை நினைத்து அம்மந்திரத்தை ஓத சூரியனும் தோன்றி அவளுக்கு மகப்பேறு அளித்தான்.

இந் நிகழ்ச்சிக்குப்பின் அஞ்சி அக் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து கங்கை ஆற்றில் விட்டு விட்டாள் குந்தி.

பின் சூரிய பகவான் அருளால் மீண்டும் கன்னியானாள். இந்த இரகசியம் யாருக்கும் தெரியாது. ஆற்றில் விடப்பட்ட குழந்தையே பின்னர் கர்ணன் எனப் புகழப்பட்டவன்.

# இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கழுத்தறுத்துக் கொலை

## பாகிஸ்தானில் பயங்கரம்




(மணிலா)
பாகிஸ்தானில் இந்துக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த 5 பேர் மிகக் கொடூரமாக கழுத்து அறுக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைகள் பாகிஸ்தானில் வாழும் இந்துக்களிடையே அச்சத்தையும் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ரஹிம் யார் கான் நகரத்தில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அபுதாபி கொலனி என்ற பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இக்கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐந்து பேரையும் கொலை செய்வதற்கு கொலையாளிகள் பயன்படுத்திய கத்தி, கோடரி உள்ளிட்ட ஆயுதங்களை சம்பவ இடத்தில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர். (நி-4-8)

# ரயில் தடம் புரண்டதில் ஒருவர் பலி, 40 பேர் காயம்



(மணிலா)
தெற்கு பாகிஸ்தானில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை லாகூர் செல்லும் ரயிலின் எட்டு பெட்டிகள் தடம் புரண்டு, ஏற்பட்ட விபத்தில் ஒரு பெண் பயணி உயிரிழந்ததுடன், மேலும் 40 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரபூர்வ ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

15-அப் கராச்சி எக்ஸ்பிரஸ், கராச்சியில் இருந்து லாகூருக்கு செல்லும் வழியில் தெற்கு சிந்து மாகாணத்தில் ரோஹ்ரி மற்றும் சாங்கி நிலையங்களுக்கு இடையே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ரயில் தடம் புரண்டதற்கு என்ன காரணம் என்பது உடனடியாகத் தெரியவில்லை.

தடம் புரண்டதற்கான காரணத்தை அறிய இந்த விபத்து குறித்து விசாரிக்கப்படும் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர். (நி-4-8)

# மீண்டும் சீற்றம் கொள்ளும் "மெராபி" எரிமலை



(ஜகார்த்தா)*
இந்தோனேசியாவின் மெராபி எரிமலை மீண்டும் சீற்றம் கொள்ள ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் எரிமலை சீற்றம் கொள்ள ஆரம்பித்து பெரும் புகை வெளியேறியது.

தொடர்ந்து எரிமலையிலிருந்து நெருப்புக் குழம்புகள் வெளியேற ஆரம்பித்துள்ளன.

இந்தோனேசியாவில் மிகவும் சுறுசுறுப்பான எரிமலைகளில் ஒன்றான மெராபி எரிமலை 2,930 மீற்றர் உயரம் கொண்டது. இந்த எரிமலை அடிக்கடி வெடித்துக் கிளம்புவது வாடிக்கையாக உள்ளது.

கடந்த ஜனவரி இறுதிப் பகுதியில் மெராபி எரிமலை வெடித்து நெருப்புக் குழம்பைக் கக்கியதுடன், வானில் 3 கிலோமீற்றர் உயரத்துக்கு சாம்பலை கக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

எரிமலைக்கு அருகில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது. (நி-4-8)

# ஈக்குவடோரிய கினியில் வெடி விபத்து; 20பேர் பலி, 600 இற்கும் மேற்பட்டோர் காயம்!



(மலபோ)
மத்திய ஆபிரிக்க நாடான ஈக்குவடோரிய கினியில் அமைந்துள்ள இராணுவ முகாமொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தொடர்ச்சியான வெடி விபத்துக்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 600 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

பட்டாவில் உள்ள மொன்டோங் நுவாண்டோமாவின் அருகாமையில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் "டைனமைட்டை அலட்சியமாக கையாளுதல்" காரணமாகவே இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. வெடிப்பின் தாக்கம் பட்டாவில் உள்ள அனைத்து வீடுகளிலும் கட்டடங்களிலும் சேதத்தை ஏற்படுத்தியது" என்று ஜனாதிபதி அறிக்கையில் தெரிவித்தார். (நி-4-8)

# உலகில் பணிபுரிய ஏற்ற நாடுகளின் பட்டியலில் கனடாவுக்கு முதலிடம்



(றொறன்றோ)
வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு உலகில் பணிபுரிய ஏற்ற நாடுகளின் பட்டியலில் கனடாவுக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

போஸ்டன் கன்சல்டிங் குரூப் மற்றும் தி நெட்வேர்க் வெளியிட்ட ஒரு ஆய்வில், இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2014 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் முதலிடத்தைப் பிடித்த அமெரிக்கா சிறந்த பணிபுரிய ஏற்ற இடமாக விரும்பப்படுவதில் வீழ்ச்சியைக் கண்டது.

இப்போது, கனடா வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான முதல் தேர்வு நாடாக மாறியுள்ளது. (நி-4)

## மகளிர் தினத்தன்று

# இந்திய விவசாயிகளின் போராட்டத்தில் இணைந்த ஆயிரக்கணக்கான பெண்கள்



(டில்லி)
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று டில்லியின் புறநகரில் விவசாயிகள் நடத்திய போராட்டங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் இணைந்தனர்.

விவசாய உற்பத்தி சந்தைகளை தனியார் வாங்குபவர்களுக்கு திறக்கும் புதிய சட்டங்களை இரத்து செய்யும்படியும் இதன் போது கோரிக்கை முன்வைத்தனர்.

அரியானா மாநிலத்துடன் டில்லியின் எல்லைக்கு அருகிலுள்ள இடத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கூடியிருந்தனர்.

இந்திய அரசாங்கத்தின் விவசாய சீர்திருத்தங்களுக்கு எதிராக டிசம்பர் மாதத்திலிருந்து, பல விவசாயிகள் தங்கள் குடும்பத்தினருடன் இந்திய தலை நகரின் புறநகரில் உள்ள மூன்று தளங்களில் முகா மிட்டுள்ளனர்.

போராட்டங்களை எதிர்கொண்ட பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் 18 மாதங்களுக்கு சட்டங்களை நிறுத்தி வைக்க முன்வந்தது. ஆனால் விவசாயிகள் பின்வாங்க மறுத்துவிட்டதுடன், சீர்திருத்தங்களை இரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர். (நி-4)

# இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் வைத்தியரை நாடவும்

## கொவிட் தடுப்பூசி பெறுபவர்களுக்கான அறிவுறுத்தல்

(கொழும்பு)

**கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் தொடர்ந்து இரண்டு நாட்கள் காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியரிடம் சென்று சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் அறிவுறுத்தியுள்ளார்.**



இரண்டு நாட்கள் மாத்திரமே இந்த காய்ச்சல் காணப்படும் என்றும் அதற்கு மேல் காணப்பட்டால் சிகிச்சை பெறுவது சிறந்தது எனவும் அவர் கூறினார்.

மேலும் சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போனவர்கள் இருப்பார்களாயின் உடனடியாக அது தொடர்பாக குறித்த பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிக்கு தெரியப்படுத்தி தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், பரிந்துரைக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் எவ்வித தடைகளுமின்றி கொவிட் தடுப்பூசியை வழங்குவதற்கு தேவையான வசதிகளை வழங்கியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன் உலக சுகாதார அமைப்பினால் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கவுள்ள தடுப்பூசிகளின் முதல் தொகுதி எதிர்வரும் சில நாட்களுக்குள் கிடைக்க விருப்பதாகவும், அவை கிடைத்தவுடன் பொது மக்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(நி-4)

# 670 கிலோ மஞ்சளுடன் புத்தளத்தில் மூவர் கைது



(புத்தளம்)

புத்தளம், செரக்குலிய கடற்கரையில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக கொண்டு வரப்பட்ட 670 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் 03 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடல் வழியாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கடற்படை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி கடந்த 06 ஆம் திகதி புத்தளம், செரக்குலிய கடற்கரையில் வடமேற்கு கடற்படை கட்டளையின் கடற் டையினர் நடத்திய சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, இரண்டு படகுகளினால் கடல் வழியாக கொண்டு வந்து கடற்கரையில் இறக்கப்பட்ட 34 பைகளில் அடைக்கப்பட்டுள்ள 670 கிலோ கிராம் உலர் மஞ்சளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். குறித்த இரண்டு படகுகளும் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டது.

உலர்ந்த மஞ்சள், படகுகளுடன் சந்தேக நபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டு நாயக்க சுங்க தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2249

### பிரியங்கா




### அக்சயன்




### சுவேதிகா




### மாதங்கி




### கிரியாத்





### மதுசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சட்டவிரோதப் பொருட்களுடன் இலங்கைப் படகுகளை கைப்பற்றியது இந்தியா




(கொழும்பு)

அங்கீகரிக்கப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் போதைப்பொருட்களுடன் மூன்று இலங்கை படகுகள் இந்திய கடலோர பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருவனந்தபுரத்தில் உள்ள விஜின் ஜாம் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக "த இந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

அகர்ஷா துவ, சதுராணி 03 மற்றும் சதுராணி 08 ஆகிய படகுகளே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்திய காவல் படையினர் குறித்த மூன்று படகுகளையும் சோதனையிட்ட போது, அங்கீரிக்கப்படாத தகவல் தொடர்பு உபகரணங்கள், போதைப் பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் விரிவான விசாரணைக்காக படகுகள் ஞாயிற்றுக்கிழமை விஜின்ஜாம் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த படகுகளிலிருந்து 200 கிலோ கிராம் ஹெரோயினும் 60 கிலோ கிராம் ஹாஷிஷ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## பொருளாதாரத்தை மேம்படுத்த அரசிடம் திட்டம் எதுவுமில்லை - ரணில்



(கொழும்பு)

நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்திடம் சிறந்த கொள்கை திட்டம் ஏதும் கிடையாது என்பதுடன் தனது பலவீனத்தை மறைத்துக் கொள்ள கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது, "தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டின் விளைவை நாட்டு மக்கள் இவ்வருட இறுதியில் அறிந்துகொள்வார்கள். அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பல இறக்குமதிகள் ஊடாக வரிச்சலுகை வழங்கியது. இதனால் சாதாரண மக்கள் பயன்பெறவில்லை. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர முன்னின்று செயற்பட்ட செல்வந்தர்கள் மாத்திரம் பயனடைந்தார்கள்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் 2010 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அச்சிடாத அளவிற்கு நாணயங்களை அச்சிட்டுள்ளது.

இவ்வாறான தன்மை நாட்டின் நிதி நெருக்கடி நிலையை வெளிப்படுத்தியுள்ளது. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் முறையற்ற பொருளா தார முகாமைத்துவ கொள்கையினை செயற்படுத்துகிறது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் வகுக்கப்பட்ட புதிய பொருளாதார முகாமைத்துவ கொள்கைகள் அனைத்தையும் அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சிறந்த விடயங்களை செயற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது. சர்வதேசத்தில் அரச முறை கடன்களை பெற முடியாத அளவிற்கு அரசாங்கம் சர்வதேச மட்டத்திலும் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. இவ்வாறான தன்மை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

வேலையில்லா பற்றாக்குறை தோற்றம் பெற்றுள்ளது. வெளிநாட்டு முதலீடுகளால் நாட்டில் தொழிற்துறையை மேம்படுத்த வேண்டும். ஆனால் தற்போது வெளிநாட்டு முதலீடுகளினால் கூட இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறவில்லை. அரசாங்கத்தின் பலவீனத் தன்மையை அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து சுட்டிக்காட்ட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-4)

## மைத்திரிக்கு எதிராக வழக்குத் தொடுப்பதா?

### தேரர் ஆவேசம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால. சிறிசேன மீது குற்ற வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற கருத்தை நிராகரிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவான மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவிற்கு அரசாங்கத்திற்குள் பிரச்சினை இருந்தது. அவரை சுதந்திரமாக இயங்க விடவில்லை. அப்படி இருக்கையில் அவர் மீது குற்றம் சுமத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளக பிரச்சினை காரணமாகவே 52 நாட்களுக்கு மகிந்த பிரதமராக செயற்பட்டதாக அபய திஸ்ஸ தேரர் தெரிவித்தார். இந்த அரசாங்கத்திற்கு குற்றங்களை ஏற்றுப் பொறுப்புக்கூற வேண்டிய அவசியம் இல்லை எனவும் தேரர் தெரிவித்தார். (நி-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பொய் முகம்!

இருக்கின்ற குழப்பத்தில் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருக்கு சேர் என்றார் என்னுடைய நண்பர். ஏதோ இதுவரைக்கும் அது பிடிக்காதது மாதிரி.மனசிலே குழப்பம் இல்லாத மனிதன் யார்?

என் மனதிலே குழப்பமே இல்லை சேர்.. நான் மிகவும் தெளிவாகத்தான் இருக்கின்றேன் என்று ஒருத்தர் சொல்கின்றார் என்று வையுங்கள். அது அவருக்கே அவரைப் பற்றித் தெரியாமல் சொல்கின்ற வார்த்தை.

இப்பொழுது உங்கள் மனதிலே குழப்பம் இருக்கா, இல்லையா என்பதை நீங்கள் தெரிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கின்றது என்கிறார் ஒரு பெரியவர். (ஓஷோ)

அது என்ன தெரியுமா? யாருமில்லாத ஒரு இடத்திலே ஒரு தனி அறைக்குள்ளே நுழைந்து பூட்டிக் கொள்ளுங்கள். ஒரு டேப்ரிக்கார்டரைப் போட்டு விடுங்கள். உங்கள் மனதிலே வருவதை கொஞ்சம் கூட மறைக்காமல் சத்தம் போட்டுச் சொல்லுங்கள். என்ன தோன்றுதோ அதை அப்படியே சொல்லிவிட வேண்டும்.

அதிலே அர்த்தம் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்க கூடாது. பிரீயா பேசுங்கள். சத்தம் போடுங்கள். ஒரு கால் மணிநேரம் கழித்து நீங்கள் பேசினதையெல்லாம். போட்டுக் கேளுங்கள். பைத்தியம் பிடித்த ஒருத்தரோடு பேச்சை நீங்கள் கேட்டது மாதிரியே தோன்றும்.

உங்களுக்குள்ளே எவ்வளவு குழப்பம் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கின்றது புரியும். எவ்வளவு அபத்தமான எண்ணங்கள் நமக்குள்ளே இருக்கு என்பது தெரியும். ஒன்றுக் கொன்று தொடர் பில்லாத துண்டுகள் எங்கள் மனதுக்குள்ளே மிதக்கின்றது விளங்கும்.

இது உண்மை. நீங்கள் வேண்டும் என்றால் நியாயமாக டெஸ்ட் செய்து பாருங்கள். இதற்கு அர்த்தம் என்ன? பைத்தியக்கார விடுதியிலே இருக்கிறவனுக்கு நூறு சதவீதம் பைத்தியம் பிடித்திருக்கு. நமக்கு அந்த அளவுக்குப் போகவில்லை. அவ்வளவு தான்.

ஆனாலும் எங்கள் நிலை வெளியில் தெரிவது இல்லை. வெளியிலே நாம் சரியான மனநிலையில் இருக்கின்ற மாதிரியே தெரிகின்றோம்.

மற்றவர்களிடம் எங்கள் மனதுக்குள்ளே இருக்கின்ற அத்தனையுமாக பேசிவிடுகின்றோம். மற்றவர்களிடம் இருந்து நாம் நிறைய மறைத்து விடுகின்றோம்.

இதற்காக நாம் தினமும் காலையில் இருந்து இரவு தூங்கப் போகின்ற வரைக்கும் சந்திக்கின்ற நபர்களுக்குத் தகுந்த மாதிரி எங்கள் முக மூடி மாறிக் கொண்டே இருக்கு.

இதிலே நாம் மற்றவர்களை மட்டும் ஏமாற்றுவது இல்லை. எங்களையும் நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம். ஆளுக்குத் தகுந்த மாதிரி எங்கள் முகத்தை மாற்றிக் கொண்டு பொய் முகத்தோடு காட்சியளிக்கின்றோம் என்பதை நாங்களே கவனிக்கிறது இல்லை. அதனால் எங்கள் உண்மையான முகம் எது என்பது நமக்கே தெரிவது இல்லை.

எங்களுடைய பொய்களை நாங்களும் நம்பிக் கொண்டு மற்றவர்களையும் நம்ப வைக்கின்ற காரியத்தைத் தான் நாம் செய்து கொண்டிருக்கின்றோம். சரி. இதெல்லாம் இருக்கட்டும். மனதிலே இருந்து குழப்பங்களை நீக்குவது எப்படி?

நிதான நிலையை அடைவது எப்படி? என்று கேட்டால் அதற்கும் பதில் சொல்கின்றார் அந்தப் பெரியவர். ஒரு பைத்தியக்காரன் என்ன நினைக்கின்றான். மற்றவர்களை பைத்தியம் என்று நினைக்கிறான். தனக்குப் பைத்தியம் என்பது அவனுக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டது என்றால் ...அதை அவன் உணர ஆரம்பித்துவிட்டால் அவன் நிதான புத்தியை அடைகின்ற வாய்ப்பு இருக்கின்றது என்று சொல்லி விடலாம்.

அதனால் நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? நாம் நிதானம் தவறிய நிலையில் இருக்கின்றதை முதலில் ஒத்துக் கொண்டு அதை நன்றாக உணர்ந்துவிட்டால் போதும்.. நிதான நிலைக்கு நாம் முன்னேறி விடலாமாம். நமக்கு ஏற்படுகின்ற விளைவுகளுக்கு நாம் தான் பொறுப்பு என்பதை மனதிலே இருத்திக் கொள்ள வேண்டும். நமக்குள்ளே ஒரு சரியான மையத்தை ஏற்படுத்தி அதிலே நமக்கு நாமே எஜமானனாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். சரியான திசையில் எங்களை நாமே கொண்டு போக வேண்டும்.

இந்த வேலையில் நாம் தீவிரமாக ஈடுபட்டால் அதன் பின்பு நாம் பொய் முகத்துடன் அலைய வேண்டிய அவசியம் இல்லை. உண்மை முகத்தோடு நிதான நிலையில் பேரானந்தம் அடையலாம். சிரித்து வாழலாம். இப்படியெல்லாம் பெரியவர்கள் சொல்கின்றார்கள். இதெல்லாம் எங்கள் லெவலில் எந்த அளவுக்கு சாத்தியம் என்று தெரியவில்லை. இருந்தாலும் முயற்சி செய்வோம். முடிந்த அளவுக்கு முன்னேறுவோம்.

நமக்குத் தெரிந்த முகம். எல்லாம் வேறு மாதிரி.

ஒரு ஆள் கேட்டான் இன்னொருத்தனிடம்.


ஏன் சேர் இந்த உலகத்தில் ஒரே மாதிரி முகத்தோடு ஒன்பது பேர் வரைக்கும் இருக்கிறதாக சொல்கின்றார்களே அது சாத்தியம் தானா? என்றான்.

சாத்தியம் தான். ஏன் அப்படி கேட்கின்றாய்? என்றான் அவன்.

அதுக்கில்லை போன மாதம் உன்னிடம் நான் வாங்கியிருந்த ஆயிரம் ரூபாயை நேற்றைக்கு உன்னை மாதிரியே ஒருத்தன் வந்து திருப்பி வாங்கிக் கொண்டு போய்விட்டான். அதனால் தான் கேட்டேன் என்றான் இவன்.

02

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

புதிய தேர்தல் முறைமையொன்று தொடர்பாக பாராளுமன்றத் தெரிவு குழுவினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இத்தெரிவுக் குழுவின் முன்மொழிவுகளின் பயனாக கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட முதலில் கம்பத்தைக் கடத்தல் முறைமையில் (FPP) மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை (PR)முறைகள் இரண்டினதும் சாதகமான அம்சங்களை ஒன்று சேர்த்து புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதனை ஆரம்பமாக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் அறிமுகம் செய்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டன.

### தேர்தல் சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்ற தேர்வுக் குழு - 2007

பழைய வட்டார தேர்தல் முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை ஆகியவற்றிக்கிடையே பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் மற்றும் குறைபாடுகளுக்கு ஒரு தீர்வாக புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான நோக்கத்தை அடைய அன்றைய அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையின் கீழ் தேர்தல் சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்றக் குழு 2003 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

புதிய தேர்தல் முறை சம்பந்தமாக இந்த தேர்வுக் குழுவானது அரசு, அரசுசாரா,தொழிற்கல்வி மற்றும் பிற சிவில் அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து எழுத்து மற்றும் வாய்வழி ஆலோசனைகளையும் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டது.

> பழைய வட்டாரத் தேர்தல் முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை ஆகியவற்றிக்கிடையே பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் மற்றும் குறைபாடுகளுக்கு ஒரு தீர்வாக புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான நோக்கத்தை அடைய அன்றைய அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையின் கீழ் தேர்தல் சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்றக் குழ 2003 ஓகஸ்ட் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

இந்த தேர்வுக் குழு, சமர்ப்பிக்கப்பட்ட அந்த விடயங்களைப் பற்றிய விரிவான ஆய்வுக்கு இணங்க, முன்னர் நிலவிய இரண்டு தேர்தல் முறைகளின் (வட்டாரம் மற்றும் விகிதாசாரம்) சில பயனுள்ள அம்சங்கள் உள்வாங்கப்பட்டு, கலப்புத் தேர்தல் முறை இந்த நாட்டை இன்னும் ஜனநாயகமாக அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று பரிந்துரைத்தது.

2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் வெளியிடப்பட்ட தேர்தல்கள் மறுசீரமைப்பு பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையானது நாட்டின் நிர்வாக அமைப்பின் அடிமட்ட மட்டத்திலிருந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் அமைப்பிலிருந்து இதைத் தொடங்க பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, 30%பிரதிநிதிகளை விகிதாசார முறையின் கீழும் 70% பிரதிநிதிகளை வட்டார முறையின் கீழும் தெரிவு செய்வதற்கான கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்த அந்தக் குழு பரிந்துரைத்தது.

> கலப்பு தேர்தல் முறையை உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் அமைப்பிலிருந்து தொடங்க பரிந்துரைக்கப்பட்டதோடு 30% பிரதிநிதிகளை விகிதாசார முறையின் கீழும் 70% பிரதிநிதிகளை வட்டார முறையின் கீழும் தெரிவு செய்வதற்கு குழு பரிந்துரைத்தது.

இங்கு உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தேச சிபாரிசாக முன்னிலைப்படுத்திக் குறிப்பிடப்பட்டிருந்தது என்னவென்றால் அக்காலத்தில் காணப்பட்ட உள்ளூராட்சி எல்லைகளை மீள நிர்ணயித்து "வட்டாரம்" என்ற புதிய அலகொன்றை வடிவமைப்பதும் அதுவரையான தேர்தல் முறையை மேற்படி வட்டார முறையை அடிப்படையாகக் கொண்டு நடத்தக்கூடிய முறையொன்று தொடர்பில் கவனம் செலுத்துவதுமாகும்.

அவ்வாறான உத்தேச சிபாரிசுகள் சற்று ஊக்கமற்ற நிலையில் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டளவில் மீண்டும் மேற்படி கலந்துரையாடல் போதியளவிலும் உயிரோட்டமுள்ளதாகவும் மாறியதோடு அதன் பெறு பேறாக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் உருவாக்கப்பட்டது.

> குழுவின் பரிந்துரை 2012 ஆம் ஆண்டளவில் 22 ஆம் இலக்க உள்ளூர் அதி கார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமாக உருவாக்கம் பெற்றது.

### 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் விசேட திருத்தச் சட்டமூலம் ஆகிய உத்தேசசட்ட மூலங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 10 முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு போன்றவற்றினால் 10 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

02/09/2010 அன்று உயர் நீதிமன்றத்தில் அன்றைய நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க தலைமையிலான நீதிபதிகள் குழு ஒன்றினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டது என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக பாராளுமன்றில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

அரசியலமைப்பின் மீதான 13 சீர்திருத்தச் சட்டத்திற்கு அமைய மாகாண சபைகளின் காட்டுப்பட்டிற்குள் வரும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் முறையில் மாத்திரமன்றி அவற்றின் எல்லைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற சட்டமூலம் சகல மாகாணசபைகளினதும் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் 2011 ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய கலப்பு முறை உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஆளும் தரப்பு,எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவுடன் 10/10/2012 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு எதுவும் இன்றி திருத்தங்களுடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, இதனூடாக உள்ளூராட்சி தேர்தல்களில் விருப்புவாக்கு முறை முற்றாக இரத்துச் செய்யப்பட்டது.

> புதிய கலப்புத் தேர்தல் முறை உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவுடன் 10/10/2012 பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு எதுவும் இன்றி திருத்தங்களுடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, இதனூடாக உள்ளூராட்சி தேர்தல்களில் விருப்பு வாக்கு முறை முற்றாக இரத்துச் செய்யப்பட்டது.

அதற்கமைய 2012 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி சபாநாயகரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தின் மூலம்) உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் வட்டார மற்றும் விகிதாசார முறைகளின் அம்சங்கள் இரண்டையும் உள்ளடக்கிய கலப்பு முறையில் நடத்த முடியுமென சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டம் நிறைவேற்றப்படும் போது குழுநிலை விவாதத்தில் கருத்துத் தெரிவித்த அப்போதைய சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். இது ஆரம்பம் மட்டுமே, சிறந்த தேர்தல் முறையொன்றை கொண்டுவர சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். நாட்டு நலனுக்காகவே அரசாங்கம் இந்த திருத்தத்தை மேற்கொண்டது.

ஜனாதிபதியே இதனை துரிதமாக நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தார். ஐ. தே. க. ஒத்துழைத்திருந்தால் பாராளுமன்ற தேர்தல் முறையையும் மாற்றியிருக்கலாம். இவ்வாறு அப்போதைய சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவித்தார்.

அப்போதைய அமைச்சர் ரவூப் 'ஹக்கீம் கூறியதாவது:- புதிய தேர்தல் முறையை கொண்டுவர பங்களித்த ஜனாதிபதி, அமைச்சர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் அடங்கலான சகலருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். இது சிறுபான்மையினருக்கு நன்மையான முறையாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. கட்சிகளின் திருத்தங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். என்று கூறினார்

அமைச்சர் விமல் வீரவன்ச கூறியதாவது:- விருப்பு வாக்கு முறையினால் மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த மாற்றம் மூலம் ஜனநாயகம் பலமடையும். இதற்கு காரணமான ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறேன். விஜித ஹேரத் எம். பி. கூறியதாவது:- இதில் குறைபாடு உள் ளது. மக்களின் அபிலாசைகள் நிறை வேறும் வகையில் இது அமைய வேண் டும். சஜித் பிரேமதாஸ எம். பி. கூறிய தாவது:- பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாகவும் ஆண்களின் பிரதி நிதித்துவம் 25 வீதமாகவும் இருக்க வேண்டும்.

இதற்காக கூடுதல் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். ஏ. எச். எம். அஸ்வர் எம். பி. கூறியதாவது:- தேர்தல் முறையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறேன். அமைச்சர் அதாவுல்லா, அமைச்சர் தினேஷ் ஆகியோரும் அதிகம் பங்காற்றினர். இலங்கையில் நீண்ட ஜனநாயக முறை காணப்படுகிறது. கொழும்பு நகரை அலங்கரிக்க நகராதிபதி முஸம்மில் பங்களிக்கிறார். நவீன உள்ளூராட்சி சபைகளின் தந்தையாக அமைச்சர் அதாவுல்லா காணப்படுகிறார்.

அங்கு வட்டார முறையில் 70% மும் விகிதாசார முறையில் 30% மும் தேர்ந்தெடுக்கப்படவேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய உள்ளூராட்சி அதிகாரசபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகாரசபைக்குமுரிய வட்டாரங்களின் எண்ணிக்கை மற்றும் அவ் வட்டாரங்களின் எல்லைகளை வரையறை செய்வதற்காக ஜயலத் ரவிதிசாநாயக்கவின் தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்று நியமனம் செய் யப்பட்டது.

> உள்ளூராட்சி அதிகார சபைக்குமுரிய வட்டாரங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வட்டாரங்களின் எல்லைகளை வரையறை செய்வதற்காக ஐவர் கொண்ட தேசிய எல்லை வரை யறைக் குழுவொன்று நியமனம் செய் யப்பட்டது.

### தேசியஎல்லை வரையறைக் குழு அறிக்கை

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 3அ.(1) பிரிவின் படி அமைச்சர் வர்த்த மானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் (தேசியகுழுவொன்றைத்) தாபித்தல் வேண்டும். இக் குழு அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய ஐந்து ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர் தேசியகுழுவின் தவிசாளராக இருப்பதற்கெனஅவரால் பெயர் குறித்துநிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

இதன் பிரகாரம் ஜயலத் ரவி திசாநாயக்கவை தலைவராகவும் பி.எச்.ஜி. பிரேமசிறி, ஏ. என்.நஹியா, தேவ்ராஜ் ஆதவன், விமல் ரூபசிங்க ஆகியோரைக் கொண்ட தேசிய எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது.

(தொடரும்)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆசீர்வாத பூஜை களனி ரஜ மஹா விகாரையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

## சம்பிக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ராஜகிரிய பிரதேசத்தில் இளைஞன் ஒருவனை விபத்துக்குள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை எதிர்வரும் 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

போலியான சாட்சிகளை தயாரித்தல் மற்றும் சாட்சிகளை மறைத்ததாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அவரது சாரதி திலும் குமார மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல ஆகியோர் மீது அதில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த முன்னிலையில் அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி



### வெற்றி தரும் சங்கு

(தொடர்ச்சி)

சங்கு தெய்வீகப் பொருளாகக் கருதப்படுவதால் அதற்கு "புனிதமான பாத்திரம்" என்றும் ஒரு பெயர் உண்டு. எனவேதான் அதில் ஊற்றப்படும் நீர் புனிதமானதாக மாறுகிறது. அந்தத் தீர்த்தத்தை குடித்தால் ஆயுள் பெருகும்.

"யார் ஒருவர் மனம் உருகி சோமவார சங்காபிஷேகம் செய்கிறாரோ அவர் செய்யும் அபிஷேகம் தேவாமிர்தத்தால் செய்யப்படும் அபிஷேகத்துக்கு இணையானது. அவருக்கு என்னிடத்தில் இடம் கொடுப்பேன்" என்று ஈசனே கூறியுள்ளார்.

சங்கு தீர்த்தம் போலவே சங்கு ஒலியும் மகிமை நிறைந்தது. சங்கொலி கேட்டதும் தீய சக்திகள் ஓடி விடும். எனவேதான் பூஜை தொடங்கும் முன்பு சங்கொலி எழுப்புவது இன்னமும் நடைமுறையில் உள்ளது.

சோமவார சங்காபிஷேகத்தை நம்மால் நடத்த இயலாவிட்டாலும் பரவாயில்லை. அந்த அபிஷேகத்தை கண்குளிர தரிசனம் செய்தாலே சங்கடங்கள் நீங்கி விடும் என்பது ஐதீகம்.

சங்காபிஷேகத்தில் தீர்த்தம் தவிர மூலிகைகள், பச்சிலைகள், வாசனைத் திரவியங்கள் கலந்தும் பயன்படுத்தலாம். இத்தகைய சங்கு அபிஷேகங்களை கண்டால் 7 பிறவி பாவங்கள் விலகுமாம்.

அதோடு இழந்த பொருள் பதவி கிடைக்கும். இம்மை-மறுமை வினைகள் தீரும். சங்காபிஷேக தீர்த்தத்தை அருந்தியவர்களுக்கு அகால மரணம் என்பது வராது. உடலில் தோன்றும் 4446 வகை நோய்கள் நீங்கும்.

அபிஷேகப் பிரியரான சிவனை ஒருவர் எந்தளவுக்கு சங்காபிஷேகத்தால் மகிழ்ச்சிப்படுத்துகிறாரோ அந்தளவுக்கு அவர் ஈசனை நெருங்க முடியும்.

சங்கு நிலையான தன்மை கொண்டது. சுட்டாலும் அது வெண்மையே தரும். பஞ்சபூதங்களால் சங்கை எந்த மாற்றமும் செய்ய இயலாது.

அதுபோல மனிதனும் மாறாத இயல்புடன் இறைவனை பூஜிக்க வேண்டும் என்பதை உணர்த்தவே இறைவழிபாட்டில் நம் முன்னோர்கள் சங்கை சேர்த்துள்ளனர்.

சங்காபிஷேகம் நடத்துபவர்களுக்கு தெளிவான மனநிலை உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். குறிப்பாக கணவன் - மனைவி இடையே அன்பு அதிகரிக்கும். லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்தத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை உருவாகும் சங்கு உலகப் புகழ் பெற்றது. சிவாலயங்களில் புதிய சங்கு வந்ததும் பழைய சங்குகளை ஏலம் விடுவார்கள்.

அந்த சங்கை வாங்கி வந்து வீட்டில் வைத்து பூஜித்தால் செல்வம் பெருகும். எந்த திருஷ்டியாக இருந்தாலும் ஓடி விடும்.

சங்கிற்கு ஆகாயத்தில் உள்ள வேத மந்திரங்களை ஈர்க்கும் சக்தி உண்டு. சங்கிலுள்ள ஜலதாள யோக ஜோதி சக்தியானது நவக்கிரகங்களின் சக்தியைப் பெற்றுத் தரும் ஆற்றல் கொண்டது. சங்கை அருகில் வைத்து எந்தக் கடவுளை வேண்டினாலும் அந்த இறைவனின் சக்தி நமக்கு முழுமையாகக் கிடைக்கும்.

எனவே ஆலயத்தில் நடக்கும் சங்காபிஷேகங்களில் கலந்து கொள்வது உங்களை மேன்மைப்படுத்தும் என்பதை மறந்து விடாதீர்கள். வீட்டிலும் சங்கு வழிபாட்டை உரிய முறையில் செய்தால் இந்தப் பிறவியில் எல்லா இன்பத்தையும் பெறமுடியும்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## விசா இன்றி தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

உரிய விசா அனுமதிப்பத்திரம் இன்றியும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியும் இலங்கையில் தங்கியிருந்த 6 தாய்லாந்து பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கொழும்பு - 03 பகுதியிலுள்ள அந்தோனி மாவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாண புலனாய்வு பிரிவினர் கோட்டை நீதவான் நீதிமன்றில் பெற்றுக் கொண்ட அனுமதிக்கிணங்க நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

## மேல் மாகாணத்தில் 1,156 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் ஆயிரத்து 156 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் 584 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனவும், ஏனையவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## நாடு திரும்பியவர்களில் 22 பேருக்கு தொற்று

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய அதிகமான இலங்கையர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றுக் காலை 06 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் இலங்கையில் கண்டறியப்பட்ட 359 பேரில் 22 இலங்கையர்கள் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 180 | 250 |
| தக்காளி | 150 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 |
| கோவா | 120 | 120 | 120 | 160 |
| கரட் | 140 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 100 | 150 |
| பாகற்காய் | 200 | 180 | 250 | 140 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 240 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 150 | 180 | 180 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 60 | 80-100 |
| இராசவள்ளி | 200 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 140 | 160 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | -- | 80 | 100 |

# காணி பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு பெற்றுக் கொடுத்தார் டக்ளஸ்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தீர்க்கமான பல முடிவுகளை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எடுத்துள்ளார்.**



பளை பிரதேச செயலகத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை உடன் பெற்றுக்கொடுத்தார்.

பச்சிலைப்பள்ளி கோவில் வயல் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயத்தைக் காரணம் காட்டி கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பான முறைப்பாடு பொது மக்களால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது, உடனடியாகவே வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

இதேபோல், தென்னை அபிவிருத்திச்சபையுடன் காணப்படும் காணிச் சர்ச்சைகளுக்கும் உரிய அமைச்சருடன் பேசி விரைவில் தீர்வைப் பெற் றுத் தருவதாகவும் தெரிவித்த அமைச்சர், இந்திராபுரம் பகுதி மக்களின் வீதிப் பிரச்சினை மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினருடனான காணிச் சர்ச்சைக்கும் விரைவில் தீர்வைப் பெற் றுத்தருவதாக உறுதியளித்துள்ளார்.

அதேபோல், இரணைதீவு பகுதியில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் முடிவையும் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உரையாடி மாற்றியமைக்க முடியும் என்றும் உறுதியாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (5-4)

# இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தோர் 1333 இழப்பீடு பெற்றுக்கொண்டோர் 302

(குருமன்காடு)


வன்செயலால் ஏற்பட்ட பாதிப்புக்கான இழப்பீடுகள் கோரி வவுனியாவில் ஆயிரத்து 333 பேர் விண்ணப்பித்துள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டு முதல் நாட்டில் இடம்பெற்ற வன்செயல் மற்றும் யுத்தத்தால் உயிரிழப்பு மற்றும் உடல் அவயவங்களை இழந்தோர், சொத்துக்களை இழந்தோர், வழிபாட்டிடங்களின் அழிவு என்பவற்றுக்கான இழப்பீடுகள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டு, இழப்பீட்டு திணைக்களம் ஊடாக இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் சொத்து மற்றும் உடைமைகள் அழி வுக்காக ஆயிரத்து 32 பேரும், உயிரிழப்பு மற்றும் அவயவங்களை இழந்தமை தொடர்பில் 119 பேரும், வழிபாட்டு தலங்களின் அழிவுக்கான இழப்பீடு கோரி 182 பேரும் என ஆயிரத்து 333 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் சொத்து மற்றும் உடைமை அழிவு தொடர்பில் 137 பேருக்கும், உயிரிழப்பு மற்றும் அவயவங்களை இழந்தமை தொடர்பில் 82 பேருக்கும், வழிபாட்டிடங்களின் அழிவுக்காக 83 பேருக்கும் என 302 பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4-250)

# பாலத்திற்குள் பாய்ந்தது பட்டா ரக வாகனம்




(நெளுக்குளம்)

மணலாற்றிலிருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற மகேந்திரா ரக வாகனம் வேகக் கட்டுப்பட்டை இழந்து முல்லைத்தீவு நாயாற்று பாலத்திற்குள் பாய்ந்தது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த வாகனத்தில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், பிள்ளை இருவரும் காய மடைந்துள்ளார்கள். வாகன சாரதியான தந்தைக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)





இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் மகளிர் தின நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முகாமையாளர் வி. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் வ. சிவானந்தனும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் திருமதி நித்யா சுரேந்திரராஜ், யாழ். பல்கலைக்கழக வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சசீலா பாலகோபி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்



மன்னார் மாவட்ட செயலகம்



முல்லைத்தீவு பிரதேச செயலகம்



வவுனியா நகரசபை

(படங்கள்:- ஜோசப்நயன், யதுபாஸ்கரன், சதீஸ்)

துன்பத்தால் தாக்குண்ட போது, உயர்வு மேலும் உயரும் என்ற உண்மையை அறிந்தேன்! இதுவே துன்பம் எனக்கு இழைத்த நன்மை – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உன்னுடைய பிரச்சினையை வைத்து என்னுடைய தேவையை நிறைவேற்றுதல்

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சர்வதேசம் தீர்வு தரும் என்ற எமது நம்பிக்கை மெல்ல மெல்ல பொய்த்துப் போவதைக் காண முடிகின்றது.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்களின் போதெல்லாம் இந்தத் தடவையாவது எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று நம்பியிருப்போம்.

எங்கள் நம்பிக்கையை உசார்படுத்துவது போல கூட்டத் தொடரின் முற்பகுதியில் சர்வதேச நாடுகள் இலங்கை ஆட்சியாளர்களை கடுமையாக அதட்டுவர். விமர்சிப்பர்.

பின்னர் வாக்கெடுப்பு என்று வந்து விட்டால், இலங்கை அரசாங்கத்துக்குக் கால அவகாசமும் வழமையாக வழங்கப்படும் உதவிகளை இரட்டிப்பாகவும் வழங்குவதென சர்வதேச நாடுகள் அறிவிக்கும்.

இதுவே வழமை என்ற பின்பு; முதலும் கடைசியுமாக 2021ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துமென தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால் அதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதான கருத்துக்கள் இப்போது வெளிவரத் தொடங்கிவிட்டன.

ஆக, வெறும் நிபந்தனைகளும் எச்சரிக்கைகளும் கால அவகாசங்களும் ஈழத் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

தவிர, ஐ.நா மனித உரிமை பேரவை எடுக்கின்ற தீர்மானங்களை இலங்கையின் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை என்பதும் தெரிந்த விடயம்.

அப்படியானால், இலங்கையில் போர்க்குற்றம் நடந்தது உண்மை என்றும் அங்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்று கூறுவதும் ஏன் என்றால், இங்குதான் உலக நாடுகளின் உள்நோக்கம் தெரியத் தொடங்குகிறது.

ஆம், இவ்வாறு கூறுவதன் மூலமாக, இலங்கை அரசாங்கத்தை மசிய வைத்து இலங்கை அரசாங்கத்தால் தமக்கு ஆக வேண்டியதை நிறைவேற்றிக் கொள்ளும் தந்திரோபாயத்தை பெரும்பாலான உலக நாடுகள் செய்தாகின்றன.

அதாவது ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தூக்கிப் பிடிப்பதனூடாக இலங்கை அரசாங்கம் இறங்கிவரும்.

அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உன் நாட்டில் எனக்கு அது வேண்டும். இது வேண்டும் என்று கேட்டால், இலங்கை அரசு மறுக்கவா போகிறது.

ஆக, உன்னுடைய பிரச்சினையை வைத்து என்னுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்கின்ற தந்திரோபாயத்தை உலக நாடுகள் பின்பற்றுகின்றன எனில், நாம் என்னதான் செய்ய முடியும்.

அட, உள்ளூரில் இருக்கக்கூடிய தமிழ் அரசியல் தரப்புகளாவது பலமானதாக – நேர்மையானதாக – தமிழ் மக்களுக்கு விசுவாசமானதாக இருந்தால் பரவாயில்லை. எங்களின் தொடர் அகிம்சைப் போராட்டம் ஏதாவதொரு வழியில் எங்களின் உரிமையை – எங்களுக்கான நீதியை உரத்து ஒலித்துக் கொண்டே இருக்குமென நினைக்கலாம்.

ஆனால் நம் தமிழ் அரசியல்வாதிகளில் யாரை நம்புவது என்பதிலேயே பலத்த சந்தேகங்களும் ஐயங்களும் இருக்கும்போது, இறைவன் உதவினாலன்றி தமிழ் இனத்துக்கு வேறு கதி ஏதுமில்லை.

# ஐ.நாவில் இலங்கை விவகாரத்தில் சீனா-ரஷ்யா தொடர்பில் அஞ்ச வேண்டாம்

## பிரித்தானிய நிழல் அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் சீனா- ரஷ்யாவை பற்றி அஞ்ச வேண்டாம், நாடுகள் தங்கள் நலனிற்காக வீற்றோவைப் பயன்படுத்துவதில் இருந்து பின்வாங்கும் நிலை ஏற்படும், இவ்வாறான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பிரித்தானிய நிழல் அமைச்சர் பிரித்தானிய அரசிடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழர் தரப்பு ஏன் அஞ்ச வேண்டும். நாம் துணிவுடன் முழுமையாக கேட்க வேண்டும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்த வேண்டும் என்பது பிரித்தானிய தொழிற் கட்சியின் பிரதான கோரிக்கை என பிரித்தானிய தொழிற்கட்சியின் தமிழ் பிரிவின் தலைவர் சென் கந்தையா தெரிவித்துள்ளார். (ம-3)

### மட்டக்களப்பில் தொடரும் போராட்டம்

## நீதிமன்ற தடையுத்தரவுடன் சென்ற பொலிஸாரினால் நேற்று குழப்பம்

(மட்டக்களப்பு)

சர்வதேசத்தை நோக்கி நீதி கோரி மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் 6ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற தடையுத்தரவுடன் சென்ற பொலிஸாரால் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை குற்றம் தொடர்பான விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்முன் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி வடக்கு-கிழக்கு தழுவிய தாக முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் மட்டக்களப்பில் நேற்று 6ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்பாக நடைபெற்றுவரும் குறித்த போராட்டத்திற்கு வலிந்த காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளும் ஆதரவாக இருந்து இணைந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.இதன் போது அங்கு சென்ற பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவுகளை வாசித்தனர். சிலருக்கு எதிராக தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நிலையில் அங்கு தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ள நபர்கள் யாரும் இல்லாதிருந்தனர்.

இதையடுத்து போராட்டத்தை கைவிட்டு கலைந்து செல்லுமாறு கடுமையான தொனியில் தெரிவித்து அங்கிருந்து சென்றதாக போராட்டத்தில் ஈடுபட்டு வருவோர் தெரிவித்தனர்.

இதேவேளை நீதிமன்ற தடையத்தரவை காரணம்காட்டிசுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை தடுத்து குழப்பும் வகையில் கடந்த சனிக்கிழமை முதல் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை சரவணை கர்ணம் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வருடாந்த மகா சிவராத்திரி தினத்தில் சிறப்புச்சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஆலயப் பிரதானமண்டபத்தில் மாலை 7.30 மணியளவில் சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் திருமந்திரம் உணர்த்தும் திருநீற்றின் மகிமை " எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (5-4)

## பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் டெங்கால் மரணம்

கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் ஒருவன் டெங்கு நோயினால் மரணித்துள்ளார்.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காதியார் வீதியை அண்டி வசிக்கும் பஜிர் நாதிர் எனும் மாணவனே மரணத்தைத் தழுவியுள்ளார்.

இவர் இம்முறை சாதாரண தர பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன் தினமே டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஏழைகளிடம் வசிக்கும் இறைவன்



❖ நன்மை பெற வேண்டுமானால் வாழும் தெய்வமாகிய மனிதர்களை வழிபடுங்கள். அதாவது ஒவ்வொரு மனிதனையும் நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

❖ கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம், ஆண்டவனுக்கு தொண்டு செய்தவனாகிறோம்.

❖ ஏழைகளிடமும், பலமற்றவர்களிடமும், நோயுற்றவர்களிடமும் இறைவனைக் காண்பவனே, அவரை உண்மையாக வணங்குபவனாவான்.

❖ எதிர்வாதம் எதுவுமின்றிக் குருவிற்குக் கீழ்ப்படிதலும், பிரம்மச்சரியத்தைக் கண்டிப்பாக பின்பற்றுதலும் வெற்றி பெறுதற்குரிய ரகசியங்களாகும்.

❖ பெரியவர்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள், அதன் விளைவாக வரும் தன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது.

❖ தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறுகிற மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதர்களைச் சாத்தான்களாக்கி விடுகின்றன.

❖ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவையாகும்.

❖ எதைக் கண்டும் அஞ்சாதீர்கள். அச்சமுள்ளவன் உலகில் வாழத் தகுதியற்றவன்

# ஜனாதிபதி நியாயமான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்

## தேரர் கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பகுதிகளை நீக்க முயற்சிக்காமல் துரிதமாக நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய பிக்கு முன்னணியின் பொதுச் செயலாளர் வக்கமுல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியர் திருத்தலத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட கறுப்பு ஞாயிறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பெருமளவானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியாயத்தை பெற்றுக் கொடுக்குமாறு நாம் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளோம். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதன் பிரதிகள் பேராயருக்கும் மகாநாயக்க தேரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த அறிக்கையில் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும்.

தாக்குதலுடன் தொடர்புடைய பலரது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. எனவே தற்போதைய ஜனாதிபதிக்கு நியாயத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பாரிய பொறுப்புள்ளது.

எமது உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதற்காகவே நாம் ஆட்சியாளர்களை தெரிவு செய்கின்றோம். எமது இந்த எதிர்பார்ப்பு கூட நிறைவேற்றப்படவில்லை என்றால் அவ்வாறான ஆட்சியாளர்களை தெரிவு செய்வதால் என்ன பயன்கிடைக்கப் போகின்றது.

தாக்குதல் சம்பவத்திற்கு சர்வதேச தலையீடு,தேசிய தலையீடு காணப்பட்டதாகவும், ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றிக் கொள்வதற்காக சிலர் இந்த மரணங்களை பயன்படுத்திக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. இதற்கான பதிலை அரசாங்கமே தெரிவிக்க வேண்டும். இதேவேளை இந்த தாக்குதல் தொடர்பில் நியாயமான தீர்வு கிடைக்கும் வரையில் நாம் இந்த எதிர்ப்பு ஆர்பாட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4-8)

# கொழும்பில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில வாரங்களாக பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு நகராட்சி மன்றத்தின் தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், தெரிவு செய்யப்பட்ட பொதுப் பகுதிகளில் எழுமாறான பி.சி. ஆர். மற்றும் அன்டிஜன் சோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன என தெரிவித்தார்.

எனினும் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே தற்போது கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர் என சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளது எனக் குறிப்பிட்ட அவர், குறிப்பாக நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில், எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அனைத்து சுகாதார நெறிமுறைகளையும் பின்பற்றுமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

பெப்ரவரி முதல் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு நகரம் முழுவதும் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.மற்றும் அன்டிஜன் சோதனைகளின் எண்ணிக்கை, தடுப்பூசிகள் செலுத்துவதற்கு தொடங்குவதற்கு முன்னர் நடத்தப்பட்டதைவிட குறைவாக உள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி-4)

# அதிவேகம் உயிரைப் பறித்தது


(கொழும்பு)

அதிக வேகத்தில் பயணித்த மோட்டார் வாகனமொன்று வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் மோட்டார் வாகனத்தை செலுத்திய இளைஞன் ஒருவன் உயிரிழநதுள்ளான்.

புத்தல பெல்வத்த பிரதேசத்தில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் உயர்தர மாணவன் ஒருவன் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

விபத்து இடம்பெறும் போது மோட்டார் வாகனத்தில் மூன்று



பேர் பயணித்துள்ளதாகவும் காயமடைந்த பாடசாலை மாணவன் உயிரிழந்த இளைஞனின் சகோதரன் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# சுற்றுலாத்துறையினருக்கான சலுகைகள் நீடிப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

கடந்த ஜனவரி முதல் விமான நிலையங்கள் மீள திறக்கப்பட்டுள்ள போதிலும், சுற்றுலாத்துறை இன்னும் இயல்பு நிலைமைக்கு திரும்பவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையினருக்கான சலுகைகளை மேலும் நீடிப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய, சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான கடன் மற்றும் குத்தகை சலுகைகளை இந்த வருட இறுதி வரை நீடிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், இது தொடர்பில் உரிய அதிகாரிகளினால் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எதிர்வரும் மே 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

எனவே இந்த சலுகைகளை நீடிக்க எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (நி-4)

# மேல்மாகாணப் பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் பூட்டு

(கொழும்பு)

மேல் மாகாணத்திலுள்ள அனைத்து அரச மற்றும் தனியார் பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் முன்னர் அறிவித்தது போல் எதிர்வரும் 15ஆம் திகதி கற்றல் நடவடிக்கைகளுக்காக மீளத் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பதுளை புற்றுநோய் பிரிவில் மூன்றாவது கொவிட் மரணம்

(பதுளை)

பதுளை பொது வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா தொற்றாளர்களில் மற்றுமொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

பஸ்ஸர.யூரி தோட்டத்தை சேர்ந்த 62 வயதுடைய நபரொருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல் தெரிவிக்கின்றன.

கொவிட் 19 தொற்று காரணமாக குறித்த வைத்தியசாலையில் இதற்கு முன்னர் இரண்டு மரணங்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மேற்கு முனைய அபிவிருத்தி அதானி நிறுவனத்திற்கு வழங்கப்படுவதற்கான காரணம் யாது

## அஜித் பி பெரேரா கேள்வி



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பு உண்மைக்குப் புறம்பானது என இந்தியா அறிவித்துள்ளதன் மூலம், கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபே குணவர்தனவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் தவறானது என்பது தெளிவாகிறது.

ஏனைய முதலீட்டாளர்களுக்கான விலைமனு கோரல் எதுவும் இன்றி அதானி நிறுவனத்திற்கு மேற்கு முனைய அபிவிருத்தி வழங்கப்படுவதற்கான பின்புலம் யாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு முனையத்தைப் போலவே மேற்கு முனையமும் அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியாவுடன் ஏற்பட்ட விரிசலால் தற்போது மேற்கு முனையத்தை அதானி நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது மேற்கு முனைய அபிவிருத்தியை அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அனுமதியளித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அதானி நிறுவனம் உலகின் பல நாடுகளிலுள்ள நிறுவனங்களுக்கு இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ஒரு நிறுவனமாகும். இதன் காரணமாகவே இந்திய அரசாங்கம் இந்த விவகாரத்திற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இலங்கை அரசாங்கமும் அதானி நிறுவனமும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது என்றும் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

ஜப்பான் இதுவரை தமது முதலீட்டாளர்களை அறிவிக்கவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது.

இவ்வாறிருக்கையில் அவசர அவசரமாக அதானி நிறுவனத்திற்கு வழங்குவதன் பின்புலம் யாது? என அவர் கேள்வி எழுப்பினார். (நி-4-8)

## 5 பேர்...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 507 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

நேற்று முன்தினம் இரவு வீட்டில் இருந்து சென்ற குறித்த நபர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து உறவினர்கள் அவரை தேடியுள்ளனர்.

இந்நிலையில் இத்திக்குளம் குளக்கட்டு பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த நபர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் குறித்த பகுதியை சேர்ந்த அஜந்தகுமார் (வயது - 40) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## திட்டமிட்ட வகை...

15ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான திட்டத்தில் எந்தவித மாற்றமும் இல்லையென்றும் அமைச்சர் கூறினார்.

மேல் மாகாண பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பெப்ரவரி 25ஆம் திகதி அனைத்து அரச மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கும் 2021 ஆம் கல்வியாண்டுக்கான முதல் தவணை விடுமுறை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இராணுவத்...

களுக்காக அபகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது.

16ஆவது காலாட் படையினரின்தேவைக்காக குறித்த காணியை நேற்று காலை 9 மணிக்கு அபகரிப்பிற்காக அளவீடு செய்ய முயற்சிக்கப்பட்டது.

இந்நிலையில் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் தலையிட்டு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அளவீட்டு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## பருத்தித்துறை...

ஏற்பட்ட தொற்றில் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் கடந்த 23ஆம் திகதி கோவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. அவர் நொச்சிகாமம் கோவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியற் கல்லூரியில் அமைந்துள்ள கோவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் நேற்று முன்தினம் வீடு திரும்பினார். எனினும் நேற்று அவரது உடல் நிலை கவலைக்கிடமான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவத்தை அடுத்து சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின்படி அவர் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதனால் வயோதிபப் பெண்ணின் சடலம் நேற்று மாலை மின் தகனம் செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டாவது கோவிட்- 19 நோயாளி உயிரிழப்பு இதுவாகும். (ம-3,18,33,60)

## வடக்கில்...

உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று இரவு திடீர் மின்தடை ஏற்பட்டது.

நேற்றிரவு 7.00 மணி முதல் இரவு 9 மணி வரை திடீர் மின்தடை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் மேலும் சில பகுதிகளிலும் முன்னறிவிப்பின்றி மின் தடை ஏற்பட்டிருந்தது.

அநுராதபுரத்தில் அமைந்துள்ள பிரதான மின்மாற்றியில் ஏற்பட்ட கோளாறே இத் திடீர் மின்தடைக்கு காரணம் என தெரியவந்துள்ளது. (ம-3)

## சாரதிகள், நடத்து...

முன்தினம் அங்கு பிசிஆர் சோதனை செய்யப்பட்டது. அதன் முடிவுகள் நேற்று இரவு வெளியாகின.

இதன்படி, 8 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 6 பேர் சாரதிகள், நடத்துநர்கள். நேற்று வரை சேவையில் ஈடுபட்டவர்கள். தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட சாரதியொருவர், அங்குள்ள தொழிற்சங்க பிரதிநிதியாவார்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்வது தொடர்பாக எழுந்துள்ள விவகாரத்தையடுத்து, யாழ்ப்பாண இ.போ.ச பிராந்திய காரியாலயத்தில் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் நேற்று அந்த தொழிற்சங்க பிரதிநிதியும் கலந்து கொண்டார்.

வடக்கிலுள்ள அனைத்து சாலைகளின் தொழிற்சங்க பிரதிநிதிகளும் நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழை அச்சுறுத்...

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைத் தரவுகளின் அடிப்படையில்,

காரைநகர் அரச பேருந்து டிப்போவைச் சேர்ந்த பேருந்து சாரதிகள் மூவர், நடத்துநர்கள் மூவர், நேரக்கணிப்பாளர்கள் இருவர்.

ஊர்காவற்றுறையில் மெலிஞ்சிமுனைக் கிராமத்தினைச் சேர்ந்த 9 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதாரத் தொண்டர் ஒருவர்,

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர்,

உடுவிலைச் சேர்ந்த இருவர் (தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள்).

ஆகியோருடன் யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூட முடிவுகளின்படி சாவகச்சேரியைச் சேர்ந்த தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## வங்கி உதவி...

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் தலையில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

மின்தடைப்பட்டிருந்த வேளையில் விபத்து இடம்பெற்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.45 மணியளவில் நல்லூர் வீரமாகாளி அம்மன் வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் நல்லூரில் வசிப்பவருமான சிறிஸ்கந்தராஜா பகீரதன் (வயது-39) என்ற 3பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,18,33)

## அத்தி...

அளவு உள்நாட்டு சந்தைகளில்கிடைக்காமை காரணமாக அவற்றின் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளன.

அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களின் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

மஞ்சள், கௌபி, உளுந்து, குரக்கன் உள்ளிட்ட மேலும்சில அத்தியாவசிய பொருட்களின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளன.

அதேநேரம் அரிசிக்கான நிர்ணய விலை அரசாங்கம் நிர்ணயித்துள்ள போதும், சந்தைகளில் அந்த விலைக்கு கிடைக்கப் பெறுவதில்லை என நுகர்வோர் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-3)

# பெண்களின் உரிமை மீறப்பட்டுள்ளது

## மைத்திரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்காற்று குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருக்கும் பிரதேச சபை பெண் உறுப்பினர்கள் 98 பேரை கட்சியின் மகளிர் தின நிகழ்வுக்கு அழைப்பு விடுக்காதமை அவர்களின் உரிமையை மீறும் செயலாகும் என கட்சியின் தலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.(ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



தன நிதானய
திகதி -2021.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 457
E 06 14 27 73
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2715
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 14 51 60 68

மஹஜன சம்பத
திகதி 2021/03/08
சீட்டிழுப்பு இலக்கம் 4420
L 7 8 9 7 3 7

மெகா பவர்
திகதி 08/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0784
E 08 02 26 36 39

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1670 திகதி 2021.03.08
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 27 29 39 53

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1216
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 08.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 115,461,250
வெற்றி இலக்கங்கள் 02 16 42 66
ஆங்கில எழுத்து T
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3546
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 08.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,481,239
வெற்றி இலக்கங்கள் 30 50 60 73
ஆங்கில எழுத்து M
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,230,396/=
திகதி : 08.03.2021
வெற்றி வாரம் : 3097
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 05 11 41 55
விருச்சிகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,446,080

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1390
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 08/03/2021
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
L 11 29 50 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 73,033,242/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1739
சீட்டிழுப்பு திகதி 08.03.2021
வெற்றி இலக்கங்கள் 02 19 21 67
ஆங்கில எழுத்து W
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 22,687,556
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# ஐ. நாவோ அல்லது சர்வதேச நாடுகளோ தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வு வழங்காது



## தேவையற்ற போராட்டங்களை உடன்நிறுத்துக

## ராஜபக்ச அரசின் அமைச்சர் கெஹலிய மிரட்டல்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, தமிழ் மக்களுக்கு எதிரான அரசு அல்ல. இந்நிலையில், அரசுக்கு எதிராகவும், அரசின் பொறுமையைச் சோதிக்கும் வகையிலும் ஐ.நாவிடம் நீதி கோரி வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தற்போது போராட்டங்ளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐ.நாவோ அல்லது சர்வதேச நாடுகளோ தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வு வழங்காது. எனவே, தேவையற்ற போராட்டங்களை தமிழ் மக்கள் உடனே நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அரசின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின்போது தமிழ் மக்களுக்கு அநீதிகள் இடம்பெற்றிருந்தால் அதற்கான தீர்வுகளை அரசுதான் வழங்கும். அதை விடுத்து நாட்டின் சட்ட திட்டங்களை மீறி ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

தமிழ் மக்களின் இந்தப் போராட்டங்களின் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகளும், புலம்பெயர் அமைப்பினரும் செயற்படுகின்றனர். இரு தரப்பினரும் தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழ் மக்களைப் பகடைக்காய்களாக்குகின்றனர்.

அரசின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் தேவையற்ற போராட்டங்களை முன்னெடுப்பதை தமிழ் மக்கள் உடன் நிறுத்த வேண்டும் என்றார். (ம-03)

## இறுதிக்கட்ட போரின்போது

# புலிகளே காணாமல் போயுள்ளனர் தமிழ் மக்கள் எவரும் அல்ல

## அமைச்சர் சரத் வீரசேகர



(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் போரின்போது தமிழீழ விடுதலைப்புலிகளும், அவர்களின் நெருங்கிய சகாக்களுமே காணாமல்போயுள்ளனர். தமிழ் மக்கள் எவரும் காணாமல் போகவில்லை.

-இவ்வாறுபொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைச் சமர்ப்பித்துள்ள நாடுகள் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்" என்றும் அவர் மேலும் கூறினார். (ம-03)

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1634)
077 436 6704, 077 179 1963

அறைகள் வாடகைக்கு
கோயில் வீதிக்கும் வைத்தியசாலை வீதிக்கும் அருகாமையில் வசதியான அறைகள் வாடகைக்கு உண்டு.
(வைத்தியர்கள் விரும்பத்தக்கது) (6075)
076 600 8451

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (6056)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
வேலையின்போது ஆரம்ப சம்பளம் -15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com
(C-1606)

வீடு விற்பனைக்கு
கொக்குவில், பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு. (6078)
076 702 3565

உடனடி வேலை வாய்ப்பு
வட மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனமொன்றுக்கு O/L, A/L பயின்ற 25 பேர் இணைக்கப்பட உள்ளனர்.
முன் அனுபவம் அவசியமற்றது.
வயது 18 - 28 வரை, தங்குமிட வசதி உண்டு. (6080)
074 091 0861, 076 808 2241

அன்னா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-1548)
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

காணி விற்பனைக்கு
பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
( வெட்டுக் கிணறு ) (6078)
076 702 3565

காணி விற்பனைக்கு
யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தேவையில்லை) (6074)
077 596 3845
076 640 0974

பணியாளர் தேவை
நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவை.
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். ( திறமைக்கேற்ப ) தங்குமிடம் வழங்கப்படும். (C-1630)
077 219 0128

காணி விற்பனைக்கு
நல்லூர், செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( மெயின் றோட்டுடன் )
( இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். ) (6079)
☎-077 288 0152
077 623 4204, 077 505 8561

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-1546)
0768226240 DHL

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.